பக்கங்கள்: 13

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 07 வள்ளுவர் ஆண்டு 2054 ஆடி 02 செவ்வாய்க்கிழமை 18.07.2023 கதிர் 249

# சிவில் சமூகமும் மோடிக்கு கடிதம்

## இந்திய துணைத் தூதரகத்தில் கையளிப்பு



**இந்தியாவிற்குப் பயணம் மேற்கொள்ள வுள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடம் 13ஆவது திருத்தச் சட்டத்தினை நடை முறைப்படுத்த அழுத்தம் கொடுக்கக் கோரி வட கிழக்கு சிவில் சமூக பிரதிநிதிகள் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கான மனு ஒன்றினை யாழ் இந்திய துணைதூ துதரகத்தில் நேற்றுக் கையளித்தனர்.**

**கடிதத்தைக்கையளித்தபின்ஊடகங்களுக்குக்கருத்து தெரிவித்த வாழ்நாள் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை தெரிவித்ததாவது:**

**13ஆவது திருத்த சட்டம் குறித்து அதனால் வந்த மாகாண சபைக் கட்டமைப்பினை முழுமையாக அமுல் நடத்துமாறு சிவில் சமூக பிரதிகளாக இந்தியத் துணைத் தூதுவரை சந்தித்து கடிதம் ஒன்றினைக் கையளித்துள்ளோம் அவர்கள் அதை டெல்லிக்கு அனுப்பி ஒரு சாதகமான பதிலை தருவார்கள் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம் முடிந்தவரையில் 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்துமாறு கோரி இந்த கடிதத்தினை அனுப்பி இருக்கின்றோம், மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுப் பின்னர் மத்தியால் திரும்பப் பெறப்பட்டவற்றை மீளவும் வழங்கி 13 முழுமையாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும் என்று எதிர்பார்க்கின்றோம். சில விடயங்கள் உடனடியாக அன்றி காலதாமதமாகலாம். இருப்பினும் 13இல் கூறப்பட்டுள்ள அனைத்து விடயங்களும் செயற்படுத்தப்படவேண்டும் என்பதே எதிர்பார்ப்பு**


**36 வருடங்கள் இந்த அரசியல்வாதிகள் 13ஐ நடைமுறைப்படுத்துவதற்குரிய நடைமுறை சாத்தியமான விடயங்கள் எதனையும் முன்னெடுக்** ☞ 2

## இனி இது ரகசியம் அல்ல!

அரசமைப்பின் 13ஆவது திருத் தம் தொடர்பில் 35 வருடங்கள் கழித்து துரத்திக்கொண்டு ஓடும் அரசியல்வாதிகளையும் சில படித்த மனிதர்களையும் பார்க்கும்போது, ''போன பஸ்ஸுக்கு கைகாட்டுவது'' என்ற கதைதான் வந்து சிரிப்பு மூட்டுகின்றது. 36 வருடங்களுக்கு முன்னர் வந்த இந்தத் திருத்தத்தைப் புறக்கணித்து 20 வருடங்கள் ஆயுதப் போராட்டம் நடத்தி, அதன் பின்னர் 14 ஆண்டுகளாக அறவழிப் போராட்டமும் நடத்திய பின்னர் பலருக்கும் 13 தொடர்பில் வந்திருக்கும் ஞானத்தை என்வென்று சொல்வதென்று தெரியவில்லை.

இந்தத்தலைவர்களுக்கு இன்றிருக்கும் அறிவை இந்தக் கடவுள் ஏன் அன்றே கொடுக்கவில்லை என்று தோன்றுகின்றது. அவர்களின் அறிவுக் கண்ணை அன்றே திறந்துவிட்டிருந்தால், லட்சக்கணக்கான மக்கள் போரில் உயிரிழந்திருக்கமாட்டார்கள். 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட தமிழ் இளைஞர்களின் உயிர்களை விடுதலை வேள்வி என்ற பெயரில் ஆகுதியாக்கியிருக்கத் தேவையில்லை, இன்னும் பல ☞ 2

## இரு குழுக்கள் நேற்றிரவு நாவாந்துறையில் மோதல்



நாவாந்துறையில் இரண்டு குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலால் நேற்றிரவு பதற்றநிலை ஏற்பட்டது,,

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட நாவாந்துறை பகுதியில் இரண்டு குழுக்களுக்கிடையில் நேற்றிரவு திடீரென மோதல் ஏற்பட்டது. இதனால் ☞ 12

# தமிழ் மக்களுடன் அதிகாரங்களைப் பகிர்வதற்கு இலங்கை ஜனாதிபதிக்கு அழுத்தம் கொடுங்கள்

## இந்தியப் பிரதமர் மோடிக்கு எழுதிய கடிதத்தில் தமிழ் அரசுக் கட்சி கோரிக்கை

**சமஷ்டிக்கான தமது அர்ப்பணிப்புத் தொடர்வதாக இந்தியப் பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதியுள்ள கடிதத்தில் தெரிவித்துள்ள தமிழ் அரசுக் கட்சி, வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங்களைப் பகிர்ந்து கொள்வதற்கான தனது அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தும்படி இலங்கை ஜனாதிபதிக்கு இந்தியப் பிரதமர் அழுத்தம் கொடுக்கவேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.**

**ஜனாதிபதியின் இந்தியப் பயணத்தையொட்டி வடக்கு கிழக்கில் இருந்து இந்தியப் பிரதமருக்குக் கடிதங்கள் அனுப்பப்பட்டுவருவதன் தொடர்ச்சியில் தமிழ் அரசுக் கட்சி தனது கடித்தத்தை நேற்று இந்தியத் தூதகரகத்தில் ஒப்படைத்தது. அந்தக் கடிதத்திலேயே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ள முக்கிய விடயங்களாவன:**

**வடக்கு - கிழக்குக்கான அரசியல் தீர்வு ஒன்றுக்கு உழைக்கும்படி தமிழ் மக்கள் எமக்குத் தொடர்ந்து ஆணை வழங்கியுள்ளார்கள். அது மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பகிர்ந்தளிக்கும்** ☞ 2

### வடக்கு - கிழக்கைச் சேர்ந்த

# தமிழ்க் கட்சிகளின் பிரதிநிதிகளுடன் அமெ. தூதுவர் நேற்று சந்தித்து பேச்சு



வடக்கு - கிழக்கு தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப் படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களை நேற்று ஒரே மேசையில் சந்தித்துப் பேசியுள்ளார் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜூலி சங்.

இது தொடர்பில் அமெரிக்கத் தூதுவர் தனது ருவிட்டர் பதிவில்,

'தமிழ்த்தலைவர்களுடன் ஆக்கபூர்வமான கலந்துரையாடலில் ஈடுபட்டதில் பெருமையடைகின்றேன்.

உண்மை,நல்லிணக்கம் மற்றும் நீடித்த அமைதிக்காக இலங்கை பாடுபடுவதால் அதிகாரப் பகிர்வு, காணிகளைத் திரும்பப் பெறுதல் மற்றும் காணாமல்போனவர்களின் குடும்பங் ☞ 12

# சாணக்கியன் எம்.பி மீது நேற்று மட்டக்களபில் தாக்குதல் முயற்சி





இலங்கைத்தமிழ்அரசுக் கட்சியின்மட்டக்களப்புமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் மீது தமிழ் மக்கள் விடுதலைப்புலிகள் கட்சியின் ஆரையம்பதி வட்டாரத் தலைவர் உள்ளிட்ட இருவர் நேற்று தாக்க முற்பட்டனர் என்று கூறப்பட்டது. இதையடுத்துக் குறித்த இருவரும் அங்கிருந்த சிலரால் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டுள்ளனர்.

அண்மையில் மன்னம்பிட்டிய பகுதியில் ☞ 12

## முத்திரை வெளியீடு





வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் தாய் நிறுவனமாகக் கருதப்படும் பற்றிக்கோட்டா கல்லூரியின் 200ஆவது ஆண்டினை முன்னிட்டு விசேட முத்திரை மற்றும் அஞ்சலுறை வெளியிட்டு வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வு நேற்று மாலை வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இடம்பெற்றது.

பாடசாலையின் அதிபர், முன்னாள் அதிபர்கள், தென்னிந்தியதிருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன் ஆகியோர் முத்திரை மற்றும் அஞ்சலுறையைப் பெற்றுகொண்டனர்.

கல்லூரியின் 200ஆவது ஆண்டினை முன்னிட்டு விசேடமாகவடிவமைக் ☞ 12

# அடுத்த நாடாளுமன்றத் தேர்தலில் தனக்கான ஆசனங்களை அதிகரிக்கவே ஐ.தே.க. முயற்சி

## நாமல் ராஜபக்ச குற்றச்சாட்டு

ஒரேயொரு ஆசனத்துடன் நாடாளுமன்றத்துக்கு வந்த கட்சியொன்று அடுத்த தேர்தலில் தனக்கான ஆசனங்களை அதிகரிப்பதற்கே இப்போது முதல் முயற்சிக்கின்றது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் ஐக்கிய தேசியக் கட்சியைக் கடுமையாகச்சாடியிருக்கிறார் பொது ஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவின் மகனுமான நாமல் ராஜபக்ச.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் புதிய லிபரல் வாதக் கொள்கை நாட்டுக்கும் , மக்களுக்கும் பயனுடையதாக அமைய வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தினார்.

றக்குவானை பகுதியில் இடம்பெற்ற பொது ஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் அவர் இதனைத்தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

அரசியல் கட்சிகள் தேர்தல்கள் குறித்து தற்போது தங்களின் நிலைப்பாட்டைத் தெரிவிக்கத் தொடங்கியிருக்கின்றன. எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ள நாங்கள் தயாராக உள்ளோம். ஆகவே தேர்தலை வெகுவிரைவில் நடத்துமாறு ஆட்சியாளர்களிடம் வலியுறுத்தியுள்ளோம். ☞ 2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

நூற்றுக்கணக்கானவர்கள் முன்னாள் போராளிகள் என்ற பெயரில் தங்கள் வாழ்க்கையைத் தொலைத் திருக்கத் தேவையில்லை, போராடவென்றுபோனபெண் பிள்ளைகள்மகிழ்ச்சிகரமான ஒரு குடும்ப வாழ்க்கையை வாழ்ந்திருக்கும், பலப்பல கோடி சொத்துக்கள் அழிந் திருக்காது. தமிழ் மக்கள் இன்றிருக்கும் பொருளாதார நலிவுநிலையில் இருந்திருக் கமாட்டார்கள். உலகநாடுகள் முழுவதும் தமிழர்கள் அகதிகளாக அலைந்திருக் கமாட்டார்கள். வளர்ச்சி யடைந்த வடக்கு கிழக்கு இருந்திருக்திருக்கும், பல அரசியல் தலைவர்களை இறந்திருக்கமாட்டார்கள், இன்றிருக்கும் பலர் அர சியலுக்கு அறிமுகமாகியே இருந்திருக்கமாட்டார்கள், ஏனெனில் சிறந்ததொரு ஜனநாயக அரசியல் கட்சிப் பாரம்பரியம் தொடர்ந்தி ருக்கும்.

துரதிர்ஷ்டவசமாக அப்படியெல்லாம்நடக்காமல் போய், இன்றைக்கு13ஐ முழு மையாகக் கேட்பவர்களின் அறிவுக் கண்ணூற்றுக்கள் அடைபட்டுக் கிடந்த கார ணத்தால், தமிழர்கள்பேரிழப் புக்களைச் சந்தித்து அழிந்து போயிருக்கிறார்கள். இப்போது அந்த அழிவிலிருந்து மீட்க 13ஐ முழுமையாகக் கேட்டுப் பெற்று அதிலிருந்து சமஷ்டியைப் பெற்றுத் தரப்போகிறார்களாம் நமது தலைவர்கள். கூரை ஏறி கோழி பிடிக்கத் தெரியாதவ னெல்லாம் வானம் ஏறி வைகுந்தம் போன கதை தான்.

இதில் எத்தனை தலை வர்களுக்கு அடுத்து வரும் தேர்தலிலும் இதே 13 கதையைச்சொல்லும்தைரி யம் இருக்கின்றது என்ப தையும் கொஞ்சம் பொறுத்தி ருந்து பார்ப்போம். அதற்கி டையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் சவுத் புளக்அதிகாரிகளில்சிலர்தான் பாவம். இலங்கையில்இருந்து வந்து குவியும் கடிதங்களை கறையான் அரிக்காமல் பத்திரப்படுத்திபைல்பண்ணி வைக்கும் மேலதிக வேலை அவர்களுக்கு. ஏனெனில் இப்போது வரைக்கும் இலங்கையில் இருந்து நான்கு கடிதங்கள் இந்தியப் பிரதமருக்கு 13 தொடர்பில் அனுப்பப்பட்டுள்ளன. அவற் றில் 2 தமக்கு 13 முழுமை யாகவேண்டும்என்கின்றன. ஏனைய இரண்டு தமக்கு சமஷ்டிதான் வேண்டும் என்கின்றன. இப்போதைக்கு 50:50 என்ற நிலை இருப் பதால் விரைவில் அதனை உடைக்க மற்றொரு கடித மாவது அனுப்பப்படவேண் டும். அதனை யார் அனுப் புகின்றார்கள் என்று பார்ப் போம். இந்தக் கடிதங்கள் எல்லாம் வடக்கு கிழக்கில் இருந்து அனுப்பப்பட் டவை. இனி மலையகத் தில் இருந்தும் கடிதப் போக்குவரத்து இந்தமுறை தொடங்கி யிருப்பதால் அங்கிருந்தும் தனியாகப் பலகடிதங்கள்செல்வதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

திடீரென்று சில பல தரப்புக்கள்13இன்பின்னால் செல்லும் அதிசயம் ஏன் நிகழ்கின்றது என்கிற காரண காரியம் தெளிவாக இல்லை. கடந்த 30 வருடங்களுக்கும் மேலாக இந்தியா 13ஐ முழுமையாக நடைமுறைப்படுத்தி அதற்கு மேலாகவும்செல்லவேண்டும் என்பதுதான் தமது நிலைப் பாடு என்று தெரிவித்து வந்தி ருக்கிறது. இன்னும் சொல் லப்போனால் அதற்கு மேல் சென்று இலங்கைக்குத் தம்மால் அழுத்தம் கொடுக்க முடியாது என்றுகூட பொருளு ணர்த்தி யிருக்கின்றது. அப்படியிருக்கும்போது, இந்த முறை மட்டும் 13ஐ முழு மையாகநடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்கவேண் டும் என்று பல தரப்பினரும் அழுத்தம் கொடுப்பதன் தேவை என்ன என்பதும், இதனை யார் பின்னணியில் நின்று இயக்குகின்றார்கள் என்பதும் விரைவில் வெளி வரும்என்றுஎதிர்பார்க்கலாம்.

ஏனெனில் இந்தியாவே இந்த நகர்வுகளின் பின்னால் இருக்கின்றது என்கிற ஒரு கருத்து இருக்கின்றது. இலங்கையிடம் அழுத்தமா கச் சில விடயங்களைச் சொல்லக்கூடிய அரசியல் ஏதுநிலையில் இந்தியா இருப் பதால் 13இன் முழுமையான நடைமுறைப்படுத்தலுக்கு உள்நாட்டிலும் முழு ஆதரவு இருக்கின்றது என்று காட்டுவதன் மூலம், அதனை இந்திய செய்வதற்கான ஏதுநிலையை ஏற்படுத்தவே இவ்வாறு 13இன் பின்னால் எமது அரசியல்வாதிகள் சிலரையும் அறிவார்ந்த மக்களையும் ஓடச் செய்தி ருக்கிறார்கள் என்றொரு வாதமும் முன்வைக்கப்ப டுகின்றது.

இதில் எந்தளவிற்கு உண்மை இருக்கின்றது என்பது தெரியவில்லை. அதேநேரம் இந்த நகர்வுக ளின்பின்னணியில்அமெரிக் காதான் இருக்கின்றது என்றும், இந்தியாவுக்குவலிக் காத வகையில் இலங்கைப் பிரச்சினையில் இந்தியா வின் வகிபாகத்தை அதிகரிப் பதற்கான அமெரிக்காவின் முயற்சியாகவே இவை நிகழ்கின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இதிலும் எந்தளவு தூரம் உண்மை இருக்கின்றன என்றும் தெரியவில்லை. இரண்டு மட்டும் உண்மை. இந்தியாவுக்குக் கடிதம் எழுதுவதை ஒரு அரசியல் முயற்சியாக எமது கட்சிகள் முன்னெடுத்து மக்களை ஏமாற்றுகின்றன என்பது, அதனையே செய்தியாக்கி பத்திரிகையாளர்கள் தங்கள் பிழைப்பைக் காத்துக்கொள் கிறார்கள் என்பது ஆகிய இரண்டும் தெளிந்த உண்மை.

50:50 கேட்டு, மாவட்ட சபை கேட்டு, சமஷ்டி கேட்டு, தனி நாடு கேட்டு, எதுவும் தரமுடியாது என்று சிங்கள பௌத்த அரசுகள் சொன்ன பிறகு, இப்போது 13ஐ தமிழ்க் கட்சிகள் கேட்டு நிற்கும் நிலையில் ஆட்சியாளர்கள் மாவட்ட சபைகள் குறித்து மீண்டும் பேசத் தொடங்கியி ருக்கிறார்கள். விரைவில் அதுதான் தீர்வு என்பார்கள், 13இல் இருந்து இறங்கி மாவட்டசபைகள்தான்சிறந்த தீர்வு அதை இந்தியாதான் பெற்றுத்தரவேண்டும் என்று கடிதம் எழுதவும் இங்கே ஆட்கள் இருப்பார்கள் என்பதுதான் யதார்த்தம்.

என்ன ஒன்று, இவர்கள் மாவட்டசபை கேட்கும்போது சிங்கள ஆட்சியாளர்கள் அதுவும்இல்லைஎன்பார்கள். அப்போது, நாடு கேட்டு, நகரம் கேட்டு, ஒரு ஊர் கேட்டு, ஒரேயொரு வீடு கேட்டு, கடைசியில் ஒரு துண்டு நிலம் கேட்டபோதும் துரியோதனன் அதைத் தர மறுத்ததால் போர் என்று புறப்பட்டபாண்டவர்கள்மாதிரி மாவட்ட சபையும் இல்லை என்றதும் மீண்டும் போர் என்றுமட்டும் தயவுசெய்து தொடங்கிவிடாதீர்கள். சனங்கள் அடித்தே கொன்று விடும் உங்களை. பேரவாவி இல்லாவிட்டாலும் வடக்கு கிழக்கு எங்கும் கடல் தாராளமாகவே உண்டு.

**இடிமின்னல்**
(idiminnal23@gmail.com)

## சிவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவில்லை குறிப்பாக இணைந்த வடகிழக்கில் அமைந்த மாகாணசபையில் ஒன்று அரை வருடங்கள் மாத்திரமே மக்கள்பிரதிநிதிகள் பங்கு பற்றினர்

பிரிந்த வடக்கு மாகா ணத்தில் ஐந்து வருடம் மாத்திரம் செயற்பாட்டில் இருந்தது அந்தக்காலத்திலும் அது சரியான முறையில் செயற்படுத்தப்படவில்லை அதிகாரங்களில் சில தடை கள் இருந்தாலும் சரியான முறையில் அமுல்படுத்தப் படவில்லை என்ற கவலை எமக்கு ள்ளது - என்றார்

கையளிக்கப்பட்ட கடி தத்தில் தெரிவிக்கப்பட்டுள் ளதாவது:

முதலாவதாக, இலங்கை மக்கள்எதிர்நோக்கிய இடர்பா டுகளை தணிப்பதற்கு பெரி தும் தேவைப்பட்ட நிதி மற் றும் அத்தியாவசிய உதவி களை வழங்குவதில் இந்திய அரசாங்கம் கடந்த 16 மாதங்களாக வெளிக்காட்டிய பேரளவு ஆதரவுக்கும் ஒத்து ழைப்புக்கும் நாம் நன்றி கூறுகிறோம்.

வடக்கு, கிழக்கு மாகா ணங்களில் உட்கட்டமைப் புக்களை மீளக்கட்டியெழுப் புவதிலும் யாழ்ப்பாணம் - கொழும்பு தொடருந்து, பலாலி - சென்னை விமான சேவை மற்றும் உத்தேச தமிழ்நாடு - யாழ்ப்பாணம் கப்பல் சேவை போன்ற ஏனைய பயணத்திட்டங்களைஏற்பாடு செய்வதிலும் உங்களது அர சாங்கள்வழங்கியபெருந்தன் மையான ஆதரவுக்கும் நாம் நன்றியுடையோம். முன்னெடுக்க உத்தேசிக்கப் பட்டிருக்கும் பல முதலீட்டு செயற்திட்டங்களுடன்சேர்த்து இந்த திட்டங்கள் எல்லாம் முடக்கநிலையில் உள்ள தமிழ் மாகாணங்களின் பொருளாதாரத்தை ஏனைய மாகாணங்களுடன் சேர்த்து மீள்விருத்தி செய்யவும் அவசியமாக தேவைப்படும் தொழில்வாய்ப்புக்களை பெருக்கவும்நிச்சயம்உதவும்.

உள்நாட்டுப்போர் முடிவுக்குவந்து14வருடங்கள் கடந்துவிட்டன. ஆனால் எமது மக்களின் சமூக, பொரு ளாதார நிலைவரங்கள் எதிர் பார்க்கப்பட்டதைப் போன்று மேம்பாட்டைக் காண வில்லை. தவறான பொருளா தார முகாமைத்துவத்தின் விளைவாக சகல இலங்கை மக்களும் எதிர்நோக்குகின்ற இடர்பாடுகளுக்கு மேலதிக மாக தமிழ் மக்கள் கூடுதல் நெருக்கடிகளுக்கு முகங்கொ டுக்க வேண்டியிருக்கிறது. உதாரணமாக, தமிழ் மாகா ணங்களில் கல்வித்தரம் விரைவாக வீழ்ச்சிகண்டு வருகிறது. பல்வேறு சாக்குப் போக்குகளின் பேரில் தமிழ் மாகாணங்களில் வளமான நிலங்கள் ஆக்கிர மிக்கப்பட்டிருப்பதன் விளைவாக விவசாயத்து றையிலும் குறிப்பிடத்தக்க எந்த முன்னேற்றத்தையும் காணமுடியாமல் இருக்கிறது.

மாகாண மட்டத்தில் சகல துறைகளையும் பய னுறுதியுடைய முறையில் திட்டமிட்டு நெறிப்படுத்தி நிருவகிக்க மக்களால் எளி தில் அணுகக்கூடிய தமிழ்நிரு வாகம் ஒன்று அவசியமாக தேவைப்படுகிறது என்று பரந்தளவில் மக்களும் பல் வேறு சிவில்சமூக அமைப்புக் களின் முன்னணி உறுப்பி னர்களும் உணருகிறார்கள். தற்போதைய நிலையில் வடக்கு, கிழக்கில் மாகாண சபைகள் மக்களால் தெரிவு செய்யப்படுவதற்குவகைசெய் வதன் மூலம் மாத்திரமே இதைச்சாத்தியமாக்கமுடியும்.

எமது தமிழ் அரசியல் தலைமைத்துவங்கள் வெறு மனே அரசியல் காரணங்க ளுக்காக ஐக்கியமின்றி இருப்பது மிகவும் துரதிர்ஷ் டவசமானதாகும். தமிழ் மக்களின் அரசியல் அபிலா சைகளை நிறைவேறச் செய்வதற்கு அர்த்தபுஷ்டி யான எந்தவொரு செயற்திட் டமும் இந்த தலைமைத்து வங்களிடம் இல்லை. ஆனால் பெரும்பான்மையான மக் கள் மாகாண மட்டத்திலான ஒரு தமிழ் நிருவாகத்தை அவசரமாக வேண்டிநிற் கிறார்கள். போரின் முடிவுக்கு பின்னரான காலகட்டத்தில் நடைபெற்றிருக்கக்கூடிய தேர்தல்களில் 2013 மாகாணசபை தேர்தலில் மாத்திரமே அதிகப்பெரும் பான்மையான தமிழ் மக்கள் வாக்களிப்பில் பங்கேற்றார்கள் என்ற உண்மையின் மூலம் இது தெளிவாக வெளிக் காட்டப்பட்டது.

அரசமைப்புக்கான13வது திருத்தத்தை முழுமையாக நடைமுறைப்படுத்த வேண் டும் என்றும் தமிழ் மாகா ணங்களில் மாகாணசபை கள் செயற்படவைக்கப்பட வேண்டும் என்றும் இந்திய அரசாங்கம் இடையறாது வலியுறுத்திவருவதை நாம் முழுமையாக அறிவோம்.

இந்த நிலைப்பாட்டை இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்தி யாவுக்கு விஜயம் மேற் கொள்ளவிருக்கும் தற்போ தைய சந்தர்ப்பத்தில் மீண் டும் அழுத்தமாக வலியு றுத்தி விரைவாக மாகாண சபைகளுக்கான தேர்தல் களை நடத்துமாறு கேட்க வேண்டும் என்று மிகுந்த சிரத்தையுடன்நாம்தங்களிடம் வேண்டிக்கொள்கிறோம் - என்றுள்ளது.

## தமிழ்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தாலும் "வரலாற் றுத் தாயகம்" என்று அங்கீ கரிக்கப்பட்டுள்ளது.

கடந்த 40 வருடங்களாக இந்திய அரசு இந்த விடயத் தில் தொடர்ந்து ஈடுபட்டு வருகின்றது. கௌரவத் துடனும் சுயமரியாதையு டனும் அமைதியுடனும் பாதுகாப்புடனும் வாழ்வதற் காக தமிழ் மக்களின் வேணவாவான அரசியல் தீர்வு ஒன்றை அடைவதற் கான இந்திய அரசின் அர்ப்ப ணிப்புக்கு நாம் நன்றி உடையவர்களாக இருக்கின் றோம்.

தமிழ்மக்களைப்பெரும் பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கில் எமது அபிலாஷைகளை அங்கீகரிக் கக்கூடிய சமஷ்டிக் கட்ட மைப்பை அடிப்படையாகக் கொண்ட சமஷ்டித்தீர்வுக்கான எமது அர்ப்பணிப்புத் தொடர் கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்துக்குப் பின்னர், இலங்கை அரசமைப்பின் 13ஆவது திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்டது. மாகாணங்களுக்கு அதிகா ரங்களைப் பகிரும் என்று கருதப்பட்டது. ஆனால் ஒற்றையாட்சியின் கீழ் உருவாக்கப்பட்ட இந்தத் திருத்தம் அதிகாரப் பகிர் வுக்குப் பதில் அதிகாரப் பரவ லாக்கத்தையே மேற் கொண்டது. எனது தலை வர்கள் அமிர்தலிங்கம் மற்றும் சிவசிதம்பரத்துடன் நானும் இதுதொடர்பில் அப்போதைய இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்திக்கு எழுதியுள்ளோம்.

உத்தேச 13ஆவது திருத்தச் சட்டத்தில் இருந்த தவறுகளை நாம் சுட்டிக்காட் டியிருந்தோம். அவை சரிசெய்யப்படும் என்று ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெவர்த் தனவிடம் இருந்து இந்தியா தொடர்ந்து உறுதிமொழி களைப் பெற்றது. ஆனால், அதன் பின்னர், சமஷ்டிக் கானபாதைக்கென உருவாக் கப்பட்ட 13ஆவது திருத்தம் ஒடுக்கப்படுவதை நோக்கிய நகர்வுகளே இடம்பெற்றன.

மங்களமுனசிங்க அறிக்கை, இந்தியப் பாணி யிலான அதிகாரப் பகிர்வு முறையைப் பரிந்துரைத்தது. 13ஆவது திருத்தத்தில் குறிப்பிடப்பட்ட ஒருங்கு நிரல் அதிகாரங்களை இல்லாது செய்து அவற்றை மத்திக்கும் மாநிலத்துக்கமாகப் பிரிப்பது, பெரும்பாலானவற்றை மாகாணத்துடன் சேர்ப்பது என்று அதில் தெரிவிக்கப் பட்டது. வடக்கு கிழக்கு மாகா ணங்களுக்கான உச்சசபை ஒன்றையும் அது பரிந்து ரைத்தது. 13ஆவது திருத்தத் துக்கு அப்பால் செல்வது அத்தகைய நல்லிணக்கத்தை உருவாக்குவதற்குத் தேவை யான சூழலை ஏற்படுத்தும்.

2012 ஜனவரியில் கொழும்புக்கு வருகை தந்த இந்திய அயலுறவுத்துறை அமைச்சர் எஸ்.எம்.கிருஷ் ணாவுடனான சந்திப்பின் பின்னர் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இதனை மீண்டும் உறுதிப்படுத்தியிருந்தார். அமைச்சர் கிருஷ்ணாவும் அவரது இலங்கை சகாவான ஜி.எல்பீரிஸும் இணைந்து நடத்திய செய்தியாளர் மாநாட்டில், இலங்கையிள் அரசமைப்பில் உள்ள 13ஆவது திருத்தம் முழுமையாக நடைமுறைப் படுத்தப்படவேண்டும் என்பதில் இந்தியாவுக்கு உள்ள அர்ப்பணிப்புத் தொடர் பில் பல சமயங்களில் வெளிப்ப டுத்தப்பட்டுள்ளது. அர்த்த முள்ள அதிகாரப் பகிர்வுக்கு பேச்சுக்கள் ஊடாக அர்த்த முள்ள அணுகுமுறையை எதிர்பார்க்கின்றோம் என்று இந்திய அமைச்சரால் தெரிவிக்கப்பட்டது.

அதன்பின்னர் 2015இல் தாங்கள் இலங்கை நாடாளு மன்றத்தில் ஆற்றிய உரையில், இந்தியாவின் நிலைப்பாட்டை உறுதியாகத் தெரிவிப்பது எனது முன்னு ரிமை, நான் கூட்டுறவு சமஷ் டியை உறுதியாக நம்புகின் றேன், அதனூடாக மாகாணங் களுக்கு மேலும் அதிகாரங் களையும் வளங்களையும் பகிர முடியும், தேசிய தீர்மானங்களை எடுக்கும் செயற்பாட்டில் அவற்றையும் பங்காளிகளாக்க முடியும் என்றுநீங்கள்தெரிவித்தீர்கள்.

இருந்தாலும் இலங்கை அரசு இது தொடர்பான தனது தொடர்ச்சியான உறுதி மொழிகளை நிறைவேற்றத் தவறியதுடன் காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்க மறுப்பதன் மூலமாக 13ஆவது திருத்தத்தை இல்லாதொழிக்கவும் முயற் சிக்கிறது.

இந்த விடயம், இலங் கையின் தேசியப் பிரச்சி னைக்குத் தீர்வு காணும் முயற்சியாக மேற்கொள்ளப் பட்ட இந்திய -இலங்கை உடன்படிக்கைக்கு இலங்கை மதிப்பளிக்கின்றதா என்கிற சிக்கலை உருவாக்கியுள்ளது.

தமிழ் மக்களின் பாது காப்பு, அடையாளம், ஒரு தேசமாக அவர்களின் இருப்பு என்பன இந்தியாவில் இருந்து குறிப்பாகத்தென்னிந்தியாவில்

தொடர்ச்சி 12ம் பக்கம்....

# மக்களின் உரிமைகளை எட்டி உதைப்போரே ஊழல் எதிர்ப்புச் சட்டத்தையும் எதிர்ப்பவர்கள்

## போட்டுத் தாக்குகின்றார் நீதி அமைச்சர்

ஊழல் எதிர்ப்புத் தொடர் பான புதிய சட்டத்தை நாடா ளுமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லாமல் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறேன். எதிராக வாக்களிப்பவர்கள் மக்களின் உரிமையை காலால் உதைப் பதற்கு சமம்.

இவ்வாறு நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்தார்.

தேசிய மத்தியஸ்த தினத்தை முன்னிட்டு ஞாயிற் றுக்கிழமை நீதி அமைச்சில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துதெரிவிக்கை யிலேயே இவ்வாறு தெரிவித் தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில் ஊழல் மோசடி களைத் தடுப்பதற்குக் காலத் துக்கு காலம் புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1950 காலப் பகுதியில் ஊழல் மோசடிச் சட் டம் இருந்தது. அதுதொடர்பான திணைக்களம் இருந்தது. அது வெற்றியளிக்காததால் 1994இல் இலஞ்சம் மற்றும் ஊழல்விசாரணை ஆணைக் குழு கொண்டுவரப்பட்டது.

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு அந்த ஆணைக் குழு போதுமானதல்ல என முழுநாடும்தெரிவித்துவந்தது. அந்த ஆணைக்குழுவினால் சாதாரண இலஞ்ச ஊழல் மோசடிக்காரர்களே கைது செய்யப்பட்டு விசாரிக்கப்பட் டதாகவும் பெரும் மோசடிக் காரர்கள் பாதுகாக்கப்படு வதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அதனால் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டத்தை சரி செய்துகொண்டு நாங்கள் தற்போது ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருகின்றோம்.

இந்த சட்டமூலத்துக்கு சிலர் ஆதரவு சிலர் எதிர்ப்பு தெரிவிக்கிறார்கள். நாடாளு மன்றத்தில் ஆளும் தரப்பில் சிலர் ஆதரவு சிலர் எதிர்ப்பு. அதேபோன்று எதிர்தரப்பிலும் சிலர் ஆதரவு சிலர் எதிர்ப்பு. எதிர்க்கட்சி பொதுவாக மோச டிக்கு எதிர்ப்பு.

எதிர்க்கட்சியில் இருக் கும்போது அனைத்து அரசியல்வாதிகளும் மோச டிக்கு எதிராகவே செயற்படு வார்கள். ஆனால் அவர்கள் ஆளும்தரப்புக்குச்சென்றால் அந்த எதிர்ப்பு இல்லாமல் போகிறது.

இன்று அரசியல்வாதி களை மோசடிகாரர்கள் என்கி றோம். ஆனால் அரசியல் வாதிகள் அந்தப் பதவியை பெற்றுக்கொள்ள வரும் பாதையும் மோசடியாகும். தேர்தல் முறைமையே மோச டிமிக்கதாகும். அதனால் தேர்தல் முறைமையை மாற்றுவதற்கு நாங்கள் முயற் சித்து வருகின்றபோதும் அதனை செய்ய முடியா மலிருக்கிறது.

2015இல் 20ஆவது அரசமைப்பு திருத்தத்தில் தேர்தல் திருத்தத்தையும் கொண்டுவந்தோம். என்றா லும் அது இடைநடுவில் கைவி டப்பட்டது. இருந்தபோது நாங்கள் கடந்த ஜனவரி மாதம் தேர்தல் செலவு வரையறைச் சட்டத்தை நாடாளுமன்றத்தில் நிறைவேற்றிக்கொண்டோம். இதன் மூலம் மோசடியை முற்றாக ஒழிக்க முடியாவிட் டாலும் சாதாரண அளவில் மோசடியை நீக்குவதற்கு இது சிறந்த சட்டமாகும் என அனைவரும்தெரிவித்தார்கள்.

இந்தச் சட்டமூலத்தை நாடாளுமன்றத்தில்சமர்ப்பித்து விவாதித்தோம். ஆனால் சட்டமூலத்துக்காகவாக்கெடுப்பு நடத்தும்போது எதிர்க்கட்சி எதிராக வாக்களித்தது. இவர்கள் ஊழலுக்கும் எதிர்ப்பு ஊழலை நிறுத்துவதற்கும் எதிர்ப்பு. இது எங்குசென்று முடியும்என்றுதான் புரியாமல் இருக்கிறது.

அதனால் தற்போது நாங்கள் ஆளும் தரப்பில் இருந்துகொண்டு ஊழல் எதிர்ப்பு சட்டமூலத்தை நாடா ளுமன்றத்துக்கு கொண்டு வந்தோம். இரண்டுதினங்கள் விவாதித்தோம். ஜூலை 19 மூன்றாம் மதிப்பீட்டில் குழுநிலையில் திருத்தங் கள் மேற்கொள்ளப்பட இருக் கின்றன. இது தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் இருக்கின்றன. இருந்தபோதும் ஆளும்கட்சி எதிர்க்கட்சி என்ற பேதம்இல்லாமல் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என எதிர்பாரக்கிறேன்.

மக்களால் தெரிவுசெய் யப்பட்டுமக்கள்சேவைக்கென நாடாளுமன்றத்துக்கு உண்மையாக வந்திருப் பவர்கள் யாரும் இந்த சட்டமூ லத்துக்கு எதிராக வாக்களிக்க முடியாது. சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதானது மக்களின் வாக்குகளில் நாடாளுமன்றத்துக்கு வந்து தங்களின் சுயநல தேவைக ளுக்கான பாதையை சரி செய்துகொண்டு, மக் களின் உரிமைகளைக் காலால் உதைப்பதற்கு சமமானதாகும் - என்றார்.

# இறக்குமதியான மருந்துகளை மீளாய்வுக்கு உட்படுத்தவேண்டும்

## சுகாதார தொழில் வல்லுநர் கூட்டமைப்பு வலியுறுத்து

மருந்துகள் தொடர்பில் எழுந்துள்ள பிரச்சினைக்குத் தீர்வாக இறக்குமதி செய்து கொண்டுவரப்பட்ட அனைத்து மருந்துகளும் மறு ஆய்வுக்கு உட்படுத்தப்படவேண்டும் என சுகாதார தொழில் வல்லு நர்களின் கூட்டமைப்பின் தலைவர் ரவி குமுதேஷ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித் தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

இந்த வருடத்தின் இது வரையான காலப்பகுதியில் 500க்கும் அதிகமான மருந்து கள் பதிவுகளுக்கு அப்பால் இறக்குமதிசெய்யப்பட்டுள்ளன.

மருந்துகளால் ஏற்பட் டுள்ள ஒவ்வாமை தொடர்பில் பல்வேறு குற்றச்சாட்டுக்கள் கிடைக்கப்பெற்றுள்ளன. இலங்கையில் ஒவ்வாமை தொடர்பில் சுகாதாரத் துறை யில் நிபுணத்துவம் பெற்றவர் கள் அதிகம் இல்லை.

நாம் அறிந்த வகையில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக் கழகத்தில் ஒருவர் இருக்கிறார். ஆனால் மருந்துகளால் ஏற்பட்ட பாதிப்புக் குறித்து விசாரிக்க நியமிக்கப்படும் குழுவில் இவரை போன்ற நிபுணத்துவம்பெற்றஒருவரின் பங்களிப்பு இருக்கவேண்டும்.

இந்தப்பிரச்சினைதொடர் பில் ஆய்வுகளை மேற்கொள் ளும்போது, நோயாளர்களின் தரப்பிலிருந்து கருத்து தெரி விக்கக்கூடிய ஒருவரும் குழு வில் இருக்க வேண்டியது அவசியமாகும் என்பதை ஜனாதிபதிக்கும், அமைச்ச ருக்கும் யோசனையாக முன்வைக்கிறோம்.

ஆட்சியாளர்கள், ஜனா திபதி, சுகாதார அமைச்சு, அமைச்சர் இந்த நேரத்தில் நோயாளர்கள் சார்பில் இருக்க வேண்டுமே தவிர மருந்துதயாரிக்கும்நிறுவனங் களுக்குச் சார்பாக இருக் கக்கூடாது. இறக்குமதிசெய்யப் பட்ட மருந்துகள்தொடர்பில்பக் கசார்பாக அன்றி ஆழமான ஆய்வுகள் மேற்கொள்ளப் படவேண்டும்.

கடந்த வருடத்தில் மாத் திரம் சாதாரண பதிவுகளின்றி 174 மருந்துகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இது தொடர்பிலும் ஆய்வு செய்து பார்க்கவேண்டும்.

தற்போது இந்த மருந்துகள் வைத்தியசாலைகளில் உள் ளன. இந்த மருந்துகளே பயன்படுத்தப்படுகின்றன. மருந்துப் பிரச்சினைக்குத் தீர்வாக பதிவு செய்யப்பட் டதாகக் கூறி கொண்டு வரப் பட்ட மருந்துகளை ஆய்வுக ளுக்கு உட்படுத்த வேண்டும் - என்றார்.

# நெருப்பால் சூடு வைத்து சிறுவனுக்கு சித்திரவதை



ந.லோகதயாளன்.

நெருப்பால் சூடு வைத்து சித்திரவதை செய்யப்பட்ட 12 வயதுச் சிறுவன் ஒருவன் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டான்.

யாழ்ப்பாணம் மாவட்டம், புன்னாலைக்கட்டுவனைச் சேர்ந்த 12 வயதுச் சிறு வன் ஒருவனே இவ்வாறு சித்திரவதை செய்யப்பட் டுள்ளான். சிறுவனின் தாயின் கணவர் நெருப்பால் சுட்டதில் சிறுவனுக்குக் காயம் ஏற்பட்டுள்ளது. கை, முகம் எனப் பல இடங்களிலும் காயங்கள் காணப் படுகின்றது என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரி விக்கின்றன.

இவ்வாறு தீக் காயத்திற்கு இலக் கான சிறுவன் அந் தத் தீப்புண்ணுடன் நேற்றையதினம் பாடசாலைக் குச்சென்றுள்ளான். அதனை அவதானித்த ஆசிரியர்கள் அவனை வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர்.

வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட சிறுவனிடம் வாக்குமூலம் பெற்று சட்டநட வடிக்கைகளைத் தொடங்கி யுள்ளனர் பொலிஸார்.

விசாரணையின்போது தனது கணவரைப் பாதுகாக் கும் நோக்கில் தானே மக னுக்குச் சூடு வைத்தார் என்று தாயார் தெரிவித்துள்ளார் எனக் கூறப்பட்டது.

காலைக்கதிர்
Kalaikkathir

# தனியார்மயமாகிறதா தபால் திணைக்களம்?

## இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார விளக்கம்

அரச மற்றும் தனியார் கூட்டு முயற்சியில் தபால் திணைக்களத்தை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றனவே தவிர, அதனைத் தனியாருக்கு விற்பதற்கான எந்தவொருதீர்மானத்தையும் அரசாங்கம் எடுக்கவில்லை எனத்தெரிவித்தஊடகத்துறை இராஜாங்க அமைச்சர் ஷாந்த பண்டார, முத்திரை கட்டணங்களையோ, தபால் கட்டணங்களையோ அதிகரிக்க எதிர்பார்க்கவுமில்லை என்றும் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில் -

தபால்திணைக்களத்தை மறுசீரமைப்பதற்காக புதிய சட்ட மூலம் தயாரிப்பு பணிகள் 80 சதவீதம் நிறைவடைந்துள்ளன. இவ்வாண்டுக்குள் அதனை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்து நிறைவேற்ற எதிர்பார்த்துள்ளோம். கடந்த ஆண்டுதபால்திணைக்களத்தின் வருமானத்தை விட செலவு இரு மடங்காகும்.

இவ்வாண்டுக்குள் வரவை மீறிய செலவைக் குறைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. 2024 இல் வரவு மற்றும் செலவை சமநிலைப்படுத்தவும், 2025 இல்தபால்திணைக்களத்தை இலாபமீட்டும் நிறுவனமாக்குவதற்குமான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அத்தோடுதபால் திணைக்களத்தை டிஜிற்றல் மயப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்களும் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

10 பில்லியனாக மதிப்பிடப்பட்டுள்ள இந்தவேலைத் திட்டத்தில் 9 பில்லியன் தனியார் முதலீடும், 1 பில்லியன் அரச முதலீடுமாகும்.

அதற்கமைய அரச, தனியார் கூட்டு முயற்சியில் தபால் திணைக்களம் டிஜிற்றல் மயப்படுத்தப்படுமே தவிர, ஒருபோதும் அதனை தனியாருக்கு விற்பதற்கு அரசாங்கம் முயற்சிக்காது.

தற்போது முத்திரைகள் ஊடாக வருடத்துக்கு 4000 மில்லியன் ரூபாவும், முத்திரை குத்துதல் ஊடாக 668 மில்லியன் ரூபாவும், தபால் பரிமாறத்தின் ஊடாக கடந்த ஜூன் 31 ஆம் திகதி வரை 130மில்லியன்ரூபாவும்வருமானமாகக் கிடைத்துள்ளது.

இவைதவிரதபால்பொதி சேவை, வீடுகளுக்கேதபால் பொதிகளை விநியோகித்தல், ஏனைய பதிவு சான்றிதழ்களை விநியோகித்தல் உள்ளிட்ட சேவைகளையும் தபால் திணைக்களம் ஆரம்பித்துள்ளது.

தபால்பொதிசேவையை மேலும் வினைத்திறனாக முன்னெடுப்பதற்கு விரைவில் 1000 ஓட்டோக்களைக் கொள்வனவு செய்து, அவற்றின் ஊடாக முன்னெடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. எவ்வாறிருப்பினும் தபால், முத்திரை கட்டணங்களை மீண்டும் அதிகரிப்பதற்கு எதிர்பார்க்கவில்லை. - என்றார். (05)



# பெரமுனவுடன் ஒன்றிணைய டலஸ் அணி கோரிக்கையாம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுடன் மீண்டும் இணைந்துகொள்ள டலஸ் அழகபெரும தலைமையிலான அணியினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

விலகி சென்றவர்கள் தாராளமாக எம்முடன் இணைந்து கொள்ளலாம் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்தார்.

தெல்தெனிய பகுதியில் இடம்பெற்றபொதுஜனபெரமுனவின் தேசிய அமைப்பாளர் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரசாங்கம் பொருளாதார ரீதியில் பாரிய நெருக்கடியை எதிர்கொண்ட போது தமது எதிர்கால அரசியலைக் கருத்திற்கொண்டு பொதுஜன பெரமுனவில் இருந்து விலகி ஒருதரப்பினர்ஹெலிகொப்டர் சின்னத்தில் அரசியல் கூட்டணி ஒன்றை அமைத்தார்கள்.

ஹெலிகொப்டர் சின்னத்தில் அமைக்கப்பட்ட கூட்டணி செயற்பாட்டு ரீதியிலான அரசியலில் ஈடுபடவில்லை. கூட்டணி பிளவடைந்துள்ளது.

எம்மை விட்டு விலகி சென்ற டலஸ் அழகபெரும தலைமையிலான சுதந்திர மக்கள் சபையினர் மீண்டும் எம்முடன் ஒன்றிணைய கோரிக்கைவிடுத்துள்ளார்கள்.

விலகிச் சென்றவர்கள் தாராளமாக எம்முடன் மீண்டும் ஒன்றிணையலாம். சவால்களுக்குமத்தியிலேயே ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன தோற்றம் பெற்றது.

ஆகவே எதிர்வரும் காலங்களில் தோற்றம் பெறவுள்ள சவால்களையும் சிறந்த முறையில் வெற்றி கொள்வோம்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கும், எமக்கும் இடையில் அரசியல் ரீதியில் வேறுபாடு காணப்படலாம். நாடு பாரிய நெருக்கடியை எதிர்கொண்டிருந்த வேளை சவால்களை தைரியமாக வெற்றிகொண்டார்.

ஆகவே, பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண ஜனாதிபதி எடுக்கும் தீர்மானங்களுக்கு முழுமையான ஒத்துழைப்புவழங்குவோம். - என்றார். (05)



# இலங்கைப் பணிப்பெண்ணுக்கு கைகால்களில் ஊசிகுத்தி வதை

இலங்கை பேரழிவிலிருந்து மீள்வதற்கான போராட்டத்தில் ஈடுபட்டுள்ள அதேவேளை மத்தியகிழக்கில் பணிபுரியும் இலங்கை பெண்கள் அந்நிய செலவாணிக்கு பெரும் பங்களிப்பை வழங்குகின்றனர். அவர்கள் அனுப்பும் மில்லியன் கணக்கான பணம் வீழ்ச்சியடைந்த பொருளாதாரத்தைத் தூக்கி நிறுத்த உதவுகின்றது.

எனினும் இவர்களில் பலருக்குத் தங்கள் குடும்பத்தினருக்காக சிறந்த வாழ்க்கை என்ற கனவு மிகவும் பயங்கரமானதாக மாறிவிடுகின்றது, அவர் நவீன கால அடிமைத்தனம் எனத் தெரிவிக்கக்கூடிய சூழ்நிலைகளில் வாழ வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றனர்.

நுவரேலியாவின் லிந்துலவை சேர்ந்த வீரன் சிவரஞ்சியினியின் அனுபவம் நவீன கால அடிமைத்தனம் என சொல்லக்கூடிய ஒன்று.

சவூதி அரேபியாவில் அவர் பணிபுரிந்த இடத்தில் அவர் மிகமோசமாக சித்திரவதை செய்யப்பட்டுள்ளார். உடலில் ஊசிகளைச்செலுத்தி சித்திரவதை செய்யப்பட்டுள்ளார்.

ஒன்பது நாள் மிகமோசமான சித்திரவதையின் பின்னர் சிவரஞ்சினி இன்னுமொரு இலங்கையரின் உதவியுடன் அந்த வீட்டிலிருந்து வெளியேறி சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்தில் தஞ்சமடைந்துள்ளார்.

மருத்துவபரிசோதனையின்போது ஐந்து நீளமான ஊசிகள்கண்டுபிடிக்கப்பட்டன என நுவரேலியா மாவட்ட வைத்தியசாலையின் இயக்குநர் தெரிவித்துள்ளார். காலிலில் இருந்த இரண்டு ஊசிகளை சத்திரகிசிச்சை மூலம் மருத்துவர்கள் அகற்றியுள்ளனர்.

ஒரு குழந்தையின் தாயாரான சிவரஞ்சினி, வெளிநாட்டுவேலைவாய்ப்பு பணியகத்தின் மூலம் ஜூன் 17 ஆம் திகதி சவூதி அரேபியா சென்றுள்ளார். கடும் பொருளாதார நெருக்கடி காரணமாகவே சவூதி அரேபியா செல்வதற்கு தீர்மானித்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

நான் சவூதி அரேபியாவில் அந்த வீட்டுக்குச் சென்ற முதல்நாளில் இருந்து என்னைதுன்புறுத்தினார்கள். அவர்களுடைய மொழி எனக்குத் தெரியாது என சிவரஞ்சினி தெரிவித்துள்ளார்.

நான் ஒருவாரகாலம் அங்கு வேலைபார்த்தேன். பெரும்கொடுமைகளை அனுபவித்தேன். எனது பிள்ளைக்காக அவற்றை சகித்துக்கொண்டேன் என அவர் தெரிவித்துள்ளார்.

கழிவறையை சுத்தம் செய்வதற்காக ஏணியில் ஏறியவேளை நான் கீழேவிழுந்தேன். தலையில் அடிபட்டது. மயக்கம் வந்தது,நான் என்னை சவூதி அரேபியாவில் உள்ள இலங்கைத் தூதரகத்துக்கு அனுப்பிவிடுங்கள். நான் இலங்கைக்கு செல்கின்றேன் எனத்தெரிவித்தேன் ஆனால் அவர்கள் அதனை ஏற்க மறுத்துஎன்னைஅடித்தார்கள் என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அவர்கள் மூன்று வருடங்கள் வேலைபார்ப்பதற்கு சம்மதம் எனத் தெரிவிக்கும் கடிதத்தில் எனது கைவிரல் அடையாளத்தைப் பெற முயன்றனர்.

நான் மறுத்ததால் அவர்கள் கோபமடைந்து ஊசிகளால் எனது கை, கால்களில் குத்தினர். நான் என்னை சித்திரவதை செய்யவேண்டாம் எனக் கதறினேன். ஆனால்அவர்கள் செவிமடுக்கவில்லை என சிவரஞ்சினி தெரிவித்துள்ளார். (05)

# விமலும் கம்மன்பிலவுமே வேட்பாளராக கோட்டாபயவைக் கொண்டு வந்தவர்கள்

## சனத் நிஷாந்த சாடல்

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கத் தீர்மானித்த போது தனிப்பட்ட முறையில் அதற்குஎதிர்ப்புதெரிவித்தேன். விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில ஆகியோரே கோட்டாபய ராஜபக்ஷவை கொண்டுவந்தார்கள். ஜனாதிபதி வேட்பாளர் விவகாரத்தில் முரண்பட்டிருந்தால் இரு ஜனாதிபதி வேட்பாளர்களை களமிறக்க நேரிட்டிருக்கும் எனநீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

தெல்தெனிய பகுதியில் இடம்பெற்ற பொதுஜன பெரமுனவின் தொகுதி அமைப்பாளர் கூட்டத்தில் உரையாற்றுகையில் மேற்கண்டவாறுகுறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு -

பாரிய போராட்டத்துக்குப்பின்னர் மீண்டெழுந்துள்ளோம். உரபற்றாக்குறை மற்றும் விவசாயத்துறை வீழ்ச்சிக்குப் பின்னரே அரசாங்கத்துக்கு எதிராக மக்கள் போராட்டத்தில் ஈடுபட ஆரம்பித்தார்கள். இதுவே உண்மை. தவறை பகிரங்கமாகஏற்றுக்கொள்ளவேண்டும். விவசாயத்துறை வீழ்ச்சி இயற்கை காரணிகளால் ஒன்றும் ஏற்படவில்லை. சேதன பசளை திட்டத்தை ஒரே கட்டமாக அமுல்படுத்தியதால் விவசாயத்துறை பாதிக்கப்பட்டது. விவசாயிகளின் போராட்டம் நாளடைவில் பாரிய மக்கள் போராட்டமாக எழுச்சி பெற்றது.

கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்கத் தீர்மானம் எடுக்கப்பட்ட போது பொதுஜன பெரமுனவின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவிடம் தனிப்பட்ட முறையில் இந்தத் தீர்மானம் சிறந்ததாக அமையுமா எனக் குறிப்பிட்டு எதிர்ப்பு தெரிவித்தேன். கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிக்க முன்னர் அவர் ஜனாதிபதி வேட்பாளர் எனத் தற்போது எமக்கு எதிராக அரசியல் செய்யும் விமல் வீரவன்ஸ, உதயகம்மன்பிலஆகியோர்மக்கள்மத்தியில் குறிப்பிட்டுமக்களை ஒன்றுதிரட்டினார்கள். இவ்வாறான நிலையில் கட்சிக்குள் முரண்பட்டுக் கொண்டால் ஜனாதிபதி தேர்தலுக்கு அப்போதைய எதிர்க்கட்சி சார்பில் இரு வேட்பாளர்களைக்களமிறக்க வேண்டியிருக்கும்.

பாரியஎதிர்பார்ப்புகளுக்கு மத்தியில் மக்கள் கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்தைத் தோற்றுவித்தார்கள். அரசியல் மற்றும் பொருளாதார ரீதியில் எழுந்த சவால்களை வெற்றிகொள்ள எமது அரசாங்கம் தோல்வியடைந்ததன் போராட்டம் தீவிரமடைந்தது. அது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது. - என்றார். (05)





# இந்திய வம்சாவளி மலையக மக்களுக்கும் புலம்பெயர் தமிழர்கள் உதவவேண்டும்

## கலாநிதி ஆறு.திருமுருகன் வலியுறுத்து

இந்தியவம்சாவளிதமிழ் மக்களுக்கு இலங்கையை சேர்ந்தபுலம்பெயர்தமிழர்கள், உள்நாட்டு தமிழர்கள் உதவிகள்செய்யவேண்டும்என கலாநிதி ஆறு.திருமுருகன் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

கீரிமலை சிவபூமி முதியோர் ஆச்சிரமத்தில் சுந்தரகைலாச கட்டட திறப்புவிழா சனிக்கிழமை நடைபெற்றது. இந்தநிகழ்வை தலைமையேற்று உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்தியாஎமக்குஇதனை செய்யவேண்டும். அதனை செய்ய வேண்டும் என ஏன நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

எமக்கும் உதவிகள் தேவைதான். ஆனால், இந்திய வம்சாவளி தமிழ் மக்கள் 200 ஆண்டு காலமாக இந்தியாவிலிருந்து இலங்கைக்கு வந்து அடிமைகளாக உணவுகளின்றி பல்வேறு துன்பங்களில் வாழ்ந்து வருகிறார்கள். அவர்களுக்கு உதவிகள்தேவை. எனினும், அவர்களுக்காக நாம் என்ன உதவிகளைச் செய்தோம்.

அவர்கள் தேயிலை, கோப்பி, கொக்கோ போன்றவற்றில் வேலைகளை செய்து இலங்கையின் பொருளாதாரத்துக்காக உதவுகிறார்கள். அத்தகையவர்கள் பல துன்பங்களுடன் அடிமை வாழ்வை வாழ்கிறார்கள்.

அவர்களுக்கு 1000 ரூபா வேதனம் கூட கிடைப்பதில்லை. அத்தகைய மக்களுக்கு தொடர்ந்துநாம்உதவிகளைச் செய்யவேண்டும். இளம் பெண்பிள்ளைகள் முதல் வயோதிபர்கள்வரைபற்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருக்கிறார்கள். யாழ்ப்பாணத்தில் பல் வைத்தியர்கள் பலர் உருவாகி வெளியேறுகிறார்கள். அவர்கள் இந்தியவம்சாவளிமக்களுக்கு வைத்திய சிகிச்சைகள் வழங்கிஉதவவேண்டும். புலம்பெயர்ந்து வாழும் எமது உறவுகளும் உள்நாட்டில் உள்ளவசதிபடைத்தவர்களும் அந்தமக்களுக்குஉதவிகளை செய்து, அவர்களை காப்பாற்ற வேண்டும். சிவபூமி அறக்கட்டளை பல உதவிகளைசெய்துவருகிறது. அதுபோல பலரும் அந்த மக்களுக்கு உதவிகளை செய்யவேண்டும். - என்றார். இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினர்களாக அமெரிக்கா கலிபோர்னியாவை சேர்ந்த வைத்திய நிபுணர் சண்முகசுந்தரம் மற்றும் அவரது மனைவி திலகா சண்முகசுந்தரம்ஆகியோரும் சிறப்பு விருந்தினராக அமெரிக்காவைசேர்ந்ததனலட்சுமி தேவகாந்தன், கௌரவ விருந்தினராக வலி. வடக்கு பிரதேச சபை செயலாளர் சு.சுதர்சன் ஆகியோரும் கலந்துகொண்டார்கள். (05)





காலைக்கதிர்
Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## வாய் தவறும் வார்த்தைகள்

அவ்வப்போது அரசியல்வாதிகள் தன்னிலை மறந்து கருத்துரைப்பது நடக்கும். நீதி அமைச்சர் விஜயதாச ராஜபக்ச அப்படித் தன்னிலை மறந்து ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். ஊழல் எதிர்ப்புத் தொடர்பான புதிய சட்டத்தை நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற பேதம் இல்லாமல் அனைவரும் ஆதரவளிக்கவேண்டும் என எதிர்பார்க்கிறேன். எதிராக வாக்களிப்பவர்கள் மக்களின் உரிமையை காலால் உதைப்பதற்குச் சமம் என்று தெரிவித்திருக்கிறார்.

ஊழல்மோசடிச்சட்டத்தைஆளும்தரப்புக்குள்ளேயே சிலர் எதிர்ப்பது தொடர்பில் அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்திருக்கின்றார். ஊழல் மோசடிச் சட்டத்தை எதிர்ப்பது மக்களின் உரிமைகளைக் காலால் உதைப்பதற்குச் சமம் என்றால், உள்ளூராட்சி சபைத் தேர்தலை ஒத்திவைத்ததன் மூலம் ஜனநாயகத்தின் அடிப்படையின் மீது, மக்களின் வாக்குரிமையின் மீது ஆட்சியாளர்கள் நடத்தியுள்ள தாக்குதலை என்னவென்று சொல்வது? அது மக்களின் உரிமையைக் காலால் எட்டி உதைக்கும் செயல் இல்லையா?

நாட்டில் ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்குக் காலத்துக்கு காலம் புதிய சட்டம் ஏற்படுத்தப்பட்டது. 1950 காலப்பகுதியில் ஊழல் மோசடிச் சட்டம் இருந்தது. அது தொடர்பான திணைக்களம் இருந்தது. அது வெற்றியளிக்காததால் 1994இல் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு கொண்டுவரப்பட்டது.

ஊழல் மோசடிகளைத் தடுப்பதற்கு அந்த ஆணைக்குழு போதுமானதல்ல என முழு நாடும் தெரிவித்து வந்தது. அந்த ஆணைக்குழுவினால் சாதாரண இலஞ்ச ஊழல் மோசடிக்காரர்களே கைதுசெய்யப்பட்டு விசாரிக்கப்பட்டதாகவும் பெரும் மோசடிக்காரர்கள் பாதுகாக்கப்படுவதாகவும் குற்றச்சாட்டுக்கள் தெரிவிக்கப்பட்டு வந்தன.

அதனால் இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு சட்டத்தை சரி செய்துகொண்டு நாங்கள் தற்போது ஊழல் எதிர்ப்புச் சட்டமூலம் ஒன்றைக் கொண்டுவருகின்றோம்.

மக்களால் தெரிவுசெய்யப்பட்டு மக்கள் சேவைக்கென நாடாளுமன்றத்துக்கு உண்மையாக வந்திருப்பவர்கள் யாரும் இந்த சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிக்க முடியாது. சட்டமூலத்துக்கு எதிராக வாக்களிப்பதானது மக்களின் வாக்குகளில் நாடாளுமன்றத்துக்கு வந்து தங்களின் சுயநல தேவைகளுக்கான பாதையை சரிசெய்துகொண்டு, மக்களின் உரிமைகளைக் காலால் உதைப்பதற்கு சமமானதாகும் – என்பதுதான் நீதி அமைச்சரின் வாதம்.

ஆனால், நாடு சுதந்திரம் அடைவதற்கு முன்பாகவே மக்களுக்குக் கிடைத்த உரிமை வாக்குரிமை. பிரிட்டிஷ் ஆட்சியில் இருந்து விடுபட்ட இலங்கையின் வயது 75. ஆனால் வாக்குரிமைக்கு வயது 92. அப்படிப்பட்ட வாக்குரிமையையே நீதி அமைச்சர் உள்ளிட்ட இன்றைய ஆட்சியாளர்கள் தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காகப் புறந்தள்ளி நடக்கும்போது, அத்தகையவர்களிடம் இருந்து ஊழல் எதிர்ப்புச் சட்டமூலத்திற்கு எதிர்ப்புக் கிளம்புவது வியப்புக்குரியதா என்ன?

மக்கள் உரிமை, ஜனநாயகம், நல்லிணக்கம், தேசிய ஒருமைப்பாடு என்கிற பதங்கள் எல்லாம் இலங்கையில் அரசியல்வாதிகளுக்கான அலங்கார வார்த்தைகளே தவிர, அவற்றின் உள்ளார்ந்த அர்த்தத்துக்கு மதிப்புக் கொடுப்பதேயில்லை என்பது நீதி அமைச்சரின் கருத்துக்களில் இருந்து மீண்டும் ஒரு தடவை உறுதியாகி இருக்கின்றது.

# இலக்கியத்தில் இணைந்த பனை

அங்கம் – 5



மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்
மெல்பேண், ஆஸ்திரேலியா.

உருக்கு வாளேந்திப் பகைசெற் றுலகினை
ஓம்பும் மணிமுடி மன்னவன் போல்
கருக்கு வாளேந்திக் கலியை அழித்திந்தக்
காசினியைக் காக்கும் ஞானப் பெண்ணே
பெண்பிளையும் தண்பனையும் பேணி வளர்த்தால்
வருடம் பண்ணிலொரு பத்தில் பயன் கொடுக்கும்
நட்டாயிரம் வருடம் நாநிலத்தில் காய்த்து நிற்கும்
பட்டாயிரம் வருடம் பாழ்போகா
திங்கட் குடையுடைச் சேரனும் சோழனும்
தென்னவனும் ஔவை சொற்படியே
மங்கல மாயுண்ட தெய்வப் பனம்பழம்
முப்பாசந் தீர்த்த முனிவர்மொழி வாய்மைபோல்
எப்போதும் நின்று பயனீயும்

கறுத்து , நிமிர்ந்து , உரமேறி , உயர்ந்துவான்பார்த்து,நிமிர்ந்துநிற்கின்ற கற்பக தருவாம் பனை பற்றித்தான் இப்பாடல்கள் வியந்து நிற்கின்றன. கூரையாய், வேலியாய், படலையாய், மனித உணவாய், கால்நடைத் தீனியாய், பாயாய், படுக்கையாய், அலங்காரப் பொருட்களாய், ஏடாய், காவலாய், மருந்தாய், விருந்தாய், பண்பாட்டின் அடை யாளமாய், என்று பல நிலைகளில்தன்னைப்பயனாக்கி முடியாத கட்டத்தில் விறகாக நின்று பெருங்கொடையினை நல்கிடும் நவீன கர்ணனாய் எங்களின்கற்பகதருவானபனை விளங்குகிறது என்பதைக் கருத்திருத்தல் அவசியமாகும்.

கற்பகதருவாம்பனையின் வரலாறு மிகவும் தொன்மையானது எனலாம். திவாகர நிகண்டில் பனை பற்றிய பெயர்கள் தொகுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. தமிழின் முதுபெரும் சொத்தான தொல்காப்பியத்தில் - மடல், ஓலை, ஏடு, பாளை, ஈர்க்கு, குலை , போன்ற சொல்லாடல்களைக் காணமுடிகிறது.தமிழ்ப் பிராமிக் கல்வெட்டுகள் கிறித்துவுக்கு முற்பட்ட தாகும். அக்கல்வெட்டிலும் பனை என்னும் சொல் இடம் பெற்றிருக்கி றது என்றும் அறிய முடிகிறது.



தமிழ் மன்னர்கள் பனையினைப் பேணி வந்திருக்கிறார்கள் என்றும் வரலாற்றால் அறிய முடிகிறது. பொருளாதார மேம்பாட்டுக்குப்பனை பேருதவியாக அமைந்திருக்கிறது.சோழ மன்னர்கள் பனையினை எல் லைப் புறங்களில் வளர்க்கவும் பலாவும் கமுகும் பனையுங் கொடியும் உள்ளிட்ட பல்லுருவில் பயன் மரம் இடவும் நடவும் என்று சோழர் காலத்துச் செப்பேட்டில் காணப்படுகிறது. பயன் மரம் என்னும் நிலையில்பனைஇடம்பெற்றிருப்பதுகருத்திருத்த வேண்டிய விடயம் அல்லவா !

பனையின் கொடையாக அமைவது நுங்கு.அதன் சுவையினை அருந்தியவர்கள் உணருவார்கள். அறியாதார் சுவைத்தால் அதன் அருமை அகம் அமரும்.நுங்கினைச் சுவைத்த பின்னர் வெட்டப்பட்ட இரண்டு நுங் கின் பாதிகளை ஒரு குச்சியால் இணைத்து அதன் நடுவில் கவரான நீளமான குச்சியைப் பயன்படுத்தி வண்டிலாய் ஓட்டிச் சிறுவர்கள் மகிழ்ந்தார்கள்,தெருத் தெருவாய் இதனை உருட்டி மகிழ்வது ஒரு விளையாட்டாக இருந்திருக்கிறது. இதனை இன்றைய இளைய தலைமுறையி னர் அறிந்திருக்கமாட்டார்கள். பெரியவர்களில் எத்தனை பேருக்கு இந் த விளையாட்டு நினைவில் இருக்கிறதோ தெரியாது ! ஆனால் இந்த வி ளயாட்டு பழைய காலத்தில் விளையாடப்பட்டிருக்கிறது என்பதனை -

பெருமடல் பெண்ணைப் பிணர்ந்தோட்டு குடவாய்க்
கோடிப் பின்னல் வாங்கித் தளரும் பைங்குரும்பை
என்று கலித்தொகை காட்டுவதும் நோக்கத்ததாகும்.

வேரிலிருந்து பனையின் பயன்கள் பல்கிப் பெருகியே இருக்கின்றன. இதனால்த்தான் கற்பகதரு என்னும் அடைமொழியே ஏற்பட்டது என லாம். பழைய காலத்தில் ஊர்கள்தோறும் பல குளங்களை வெட்டினார்கள்.

குளங்களை வெட்டினால் மட்டும் நீர் மட்டம் உயர்ந்து விடாது.நீர் மட்டம் உயர்வதற்குச் சில மரங்கள் உதவியாய் அமைந்தன.

அப்படியானமரங்களுள்ஒன்றுதான் எங்கள் கற்பகதருவாம் பனை ஆகும். குளங்களைச் சுற்றி ஆயிரக் கணக்கில் அக்காலத்தில் பனை மரங்களை வளர்த்தார்கள்.

பொதுவாக எல்லா மரங்களுமே வேர்களைப் பக்கவாட்டில் மட்டுமே பரப்பக் கூடியன. ஆனால் பனைமரம் மட்டுமே வேரினை செங்குத்தாக நிலத்தின் உள்ளே செலுத்தி வளரும். பனையின் வேர் செங்குத்தாக நிலத்தடியில் காணப்படும் நீரினை நோக்கியே செல்லும்.நீரை நோக்கி நேராகச்செல்லும் குழாய் போல பனையின் வேர்கள் அமைந்திருப்பதால் - நிலத்தடியில் உள்ள நீரை தரைப் பகுதி க்கு கொண்டு வரும் நீர்ப்பாசனப் பொறியாளராக பனையின் வேர் விளங்கி நின்றது. பனையின் வேரின் இந்தப் பெருஞ் செயலினால் நீரானது குளங்களில் நிரம்பவும், நிலத்தில் வழிந்தோடவும், ஆறுகளில் நீர்நிறையவும் வழிவகுத்து நிற்கிறது எனலாம். பனையால்ஏற்படும் நீர் முகாமைத்து-வத்தை அறிவது அவசியம்அல்லவா! புயலினின்றும் பாதுகாப்பினை அளிக்கவும் பனைகள் உதவியாய் இருக்கின்றன.வெள்ளப் பெருக்கைத் தடுக்கும் நிலையிலும் பனைகள் கைகொடுத்திருக்கின்றன. நாட்டின் பாதுகாப்பு அரணாய் அக்காலத்தில் பனை மரங்களை எல்லைகளில் நட்டு வைத்தார்கள் என்பதையும் அறிய முடிகிறது.



பத்துப்பாட்டு என்கிறோம். எட்டுத் தொகை என்கிறோம். மேற்கணக்கு கீழ்க் கணக்கு என்றெல்லாம் சொல்லுகிறோம். காவியங்கள் என்கிறோம் . இதிகாச புராணங்கள் என்கிறோம்.ஐம்பெரும் காப்பியங்கள் என்று பெருமையுடன் அழைகின்றோம். இவை அத்தனையும் எங்களு க்கு இன்று கிடைத்திருக்கிறது என்றால் அதற்குக் காரணமாய் அமைந்தது கற்பகதருவாம் பனை என்பதை மட்டும் மறந்து விடக் கூடாது. ஆழ்வார் பாடல்களோ , நாயன்மார் பாடல்களே, சோதிடம், வைத்தியம் தொடர்பான வியங்களோ எங்களுக்குக் கிடைத்திருக்கிறது என்றால் அதற்கு அருந்துணையாய் அமைந்தது பனைதான் என்பதை எவருமே மறுத்துரைத்து விட முடியாது. பனைக்கும் இலக்கியத்துக்கும் என்ன தான் இருக்கிறது என்று எண்ணுகிறீர்களா ? பனை இல்லாவிட்டால் நாங்கள் பெருமைப்படுத்திக் காட்டிக் கொண்டிருக்கும் அத்தனையும் எப் பவோ மறைந்திருக்கும். ஆனால் அவற்றை எல்லாம் எங்கள் பரம்பரைக்கே அளித்த பெருமை பனையின் கொடையான பனை ஓலைக்கே உரித்தாகும்.

ஏட்டில் எழுதப்படா விட்டால் நாங்கள் எல்லாவற்றையும் இழந்திருப்போம். பனை என்பது மரம் அல்ல ! அது வரமாகும்! பனை ஓலையினை நாம் சாதாரணமாக எடை போட்டு விடக் கூடாது. செய்திகளைப் பறிமாறப் பயன்பட்டது பனை ஓலைதான். இதனால்தான் ஓலை எழுதுதல், திருமணப்பட்டோலை எழுதுதுதல், என்னும் வழக்கும் வந்தது எனலாம்.

இன்று பல இடங்களில் பட்டோலை எழுதுதல் என்பது நடைமுறையில் இருப்பதும் நோக்கத்தது. ஏட்டில் எழுதப்பட்ட வேளையில் - அவ்வோலைகளுக்குக் கென்றுதனித்தவிசேடமானபெயர்களும் இருந்திருக்கின்றன. திருமணத்துக்கு அனுப்பப்படும் ஓலை, இறப்பினைத் தெரிவிப்பதற்கான ஓலைக்கு நீட் டோலை என்னும்பெயரும் - படிஅதாவது நகல் எடுத்து நிற்கும் ஓலை க்கு மூல ஓலை என்றும், ஆவணங்கள் இடம் பெற்ற ஓலைக்கு சுருள் ஓலை என்றும், எந்தவித பழுதுமில்லா ஓலைக்கு குற்றமற்ற ஓலை என்றும் ,

(7ஆம் பக்கம் பார்க்க........)


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இந்த விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 390/=
Chikne Fried Rice with Vegetable - 1150/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swahpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# 13ஆம் திருத்தச் சட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்படவேண்டும்

## வடமாகாண முன்னாள் அமைச்சர் வலியுறுத்து

13 ஆம் திருத்தச் சட்டம் உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இதை நடைமுறைப்படுத்துங்கள் என்று தான் கோருகின்றோம். இது ஏன் வேண்டாம், இதில் என்னென்ன குறைபாடுகள் உள்ளன போன்ற காரணங்கள் தான் சமஷ்டிக்கான படிக்கட்டுக்களாக இருக்கப்போகின்றன என வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதும் இந்தியாவின் வகிபாகமும் பற்றிய கலந்துரையாடல் நிகழ்வில் பங்கேற்று கருத்து தெரிவிக்கும்போது அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில் -

13ஆம்திருத்தச்சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரும்போது துரோகிகள், தமிழர்களுக்குத் துரோகமிழைத்துவிட்டார்கள் என இந்தத் திருத்தச் சட்டத்தை பிரிவுபடுத்தி குறுகிய அரசியலாக நோக்குகின்றனர்.

35 ஆண்டுகளாக அரசமைப்பிலுள்ள விடயத்தை நடைமுறைப்படுத்துவதற்காக கோரும் உரிமை - பொறுப்பு எங்களுக்கும், அதை நடைமுறைப்படுத்த வேண்டிய கடமை அரசாங்கத்துக்கும் காணப்படுகின்றது.

ஆகவே இதை எதிர்க்கும் தரப்பினர் உணர்ச்சிவசப்படுகின்றார்களா அல்லது வாக்குகளை பெறுவதற்கான குறுகிய அரசியல் நோக்காக செயற்படுகின்றார்களா எனத் தெரியவில்லை.

இந்தச் சட்டத்தில் வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரம் இன்னும் நடைமுறைக்கு வரவில்லை. காணி அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் இயலுமை எமக்கில்லை. 30 ஆண்டுகளாக உயிர்கள், சொத்துக்களை இழந்தவர்கள் நாங்கள்தான். எமது தீர்வுக்காக இந்தச் சட்டம் வந்தாலும் மாறாக இதன் நன்மைகளைத் தென்னிலங்கையே அனுபவித்தது.

எனினும் யுத்தம் நடைபெறும்போது வர்த்தமானி ஊடாகவும் பரிந்துரைகளுடாகவும் பல அதிகாரங்களை மத்திய அரசு மீள எடுத்துக்கொண்டது.

13 ஆம் திருத்தச் சட்டம் என்பது நாட்டின் நீதியுயர் சட்டத்தின் ஒரு பகுதியாகும். எனவே, இதில் திருத்தம் மேற்கொள்ள வேண்டுமாயின் நாடாளுமன்றத்தினூடாகவே மேற்கொள்ள முடிவதுடன் மாறாக நிர்வாக நடவடிக்கைகளுடாகவோ, வர்த்தமானியூடாகவோ, பரிந்துரைகளுடாகவோ மாற்றியமைக்க முடியாது.

இலங்கை - இந்தியா ஒப்பந்தத்தில் தமிழர்கள் சார்பில் கைச்சாத்திட்ட இந்தியா, ஈழத் தமிழர்களுடைய பிரச்சினை தொடர்பில் அன்று முதல் இன்று வரை ஏதோ ஒரு நடவடிக்கையை மேற்கொண்ட வண்ணமுள்ளது.

அமெரிக்காவாயினும் ஐரோப்பிய ஒன்றியமாயினும் ஐக்கிய நாடுகள் சபையாயினும் சரி இந்தியாவை மீறி எந்தவொரு நடவடிக்கையையும் மேற்கொள்ளாது.

மாறாக, இந்தியாவின் ஆலோசனைகள், விருப்பங்களில் தான் அனைத்தும் நடக்கும் என்பது சர்வதேச அரசியலில் தற்போதுள்ள யதார்த்தம்.

2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவடையும் வரை ஈழமோ அதியுச்சபட்ச சமஷ்டியோ கிடைக்கலாம் என்ற நம்பிக்கை இருந்தது. யுத்தம் முடிவடைந்து 14 ஆண்டுகள் கடந்தும் எந்த நாடும் தீர்வு பற்றி எதுவும் பேசவில்லை.

நாங்கள்தான்நாடுகளைத் தேடி கண்டறிந்து எமது தீர்வுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

சர்வதேச அரசியலை எடுத்துக்கொண்டால் எந்தவொரு நாடும் தனது நலனிலே கவனம் செலுத்தும். அவர்களின் நலனோடு சேர்த்தோ ஒத்திசைவான திசையிலோ எமது பிரச்சினைகளையும் எடுத்துக்கொள்ளலாம் என்ற நிலைப்பாடே உள்ளது.

இந்நிலையில், இந்தியா தமிழ் மக்களின் பிரச்சினையைக் கையாள்வதன் மூலம் இலங்கை அரசைக் கையாள முடியும் என்பது உண்மை.

ஐக்கியநாடுகள்சபையில் பீட்டோ அதிகாரத்தை கொண்டிருக்கும் சீனா ஏனைய நாடுகளின் விடயத்தில் வாய் திறப்பதில்லை.

13 ஆம் திருத்தச் சட்டம் கொண்டு வருவதற்க முன்னர் இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலைகளும் தேசிய பாடசாலைகளாகவே காணப்பட்டது.

சட்டம்கொண்டுவந்ததன் பின்னர் 19 பாடசாலைகளே காணப்பட்டாலும், யுத்தத்தின் பின்னர்அகிலஇலங்கையிலே 350 வரையிலும் வட மாகாணத்தில் 20 பாடசாலை கள் வரையிலும் தேசிய பாடசாலைகளாக் கப்பட்டுள்ளன.

கடந்த வருடமும் தேசிய பாடசாலையாக்கத்துக்கு எதிராக மாகாண சபை நியதிச் சட்டத்தை மீறல், 13 ஆம் திருத்தச் சட்டத்தை மீறல் எனும்சாராம்சத்தில்வழக்கை தாக்கல் செய்தேன்.

இதன் தீர்ப்புகளைக் கவனத்திலெடுத்து எதிர்வரும் காலங்களில் ஏனைய துறைகளுக்கும் இம்முறையைப் பிரயோகித்து பறிக்கப்பட்ட அதிகாரங்களை மீளப்பெற முயற்சிக்கலாம்.

எனவே, 13 ஆம் திருத்தச் சட்டத்தை அமுலாக்குவதற்கு இந்தியாவுக்கு அழுத்தம் பிரயோகிக்க வேண்டிய கடப்பாடு உண்டு. எனவே, இந்த விடயத்தை எங்களுடைய கட்சியினர் எந்தளவுக்கு மேற்கொள்கின்றோம் என மீள்பரிசீலனை செய்ய வேண்டும் எனத் தெரிவித்துள்ளார். (05)

# மேலும் இருவருக்கு ஒவ்வாமை தடுப்பூசி தற்காலிகமாக நீக்கம்

## சுகாதார அமைச்சு நடவடிக்கை



பேராதனை வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டு உயிரிழந்த யுவதிக்கு ஏற்றப்பட்ட தடுப்பூசியை செலுத்திய மேலும் இருவருக்கு ஒவ்வாமை ஏற்பட்டு கண்டி வைத்தியசாலையில்சிகிச்சை பெற்றுவருகின்றனர்எனவும், குறித்த தடுப்பூசியை பாவனையிலிருந்துதற்காலிகமாக நீக்கியுள்ளதாகவும் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மேற்படி யுவதியின் மரணத்துக்கான உறுதியான காரணத்தைக் கண்டறிய நியமிக்கப்பட்டஐவர்அடங்கிய விசாரணைக் குழுவின் உறுப்பினர்கள் பேராதனை வைத்தியசாலைக்கு சென்று விசாரணைகளை ஆரம்பித்துள்ள நிலையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டவை வருமாறு-

நாம் கண்டறிந்த விடயங்கள் மற்றும் காணப்பட்ட குறைபாடுகளை நிவர்த்தி செய்து எவ்வாறு எதிர்காலத்தில் செயற்படுவது என்பது தொடர்பாக சகல விடயங்களையும்உள்ளடக்கி செயற்படுவதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

சில சந்தர்ப்பங்களில் சில மருந்துகளுக்கு ஒவ்வாமை ஏற்படலாம். அவ்வாறு ஒவ்வாமை வைத்தியசாலைகளில் ஏற்பட்டால் ஒவ்வாமையிலிருந்து காப்பாற்ற முடியும். சிலவேளைகளில் எம்மால் அவ்வாறு செயற்பட முடியாது. அந்த நிலைமையே பேராதனை வைத்தியசாலையில் ஏற்பட்டுள்ளது. இது துரதிஷ்டமான சம்பவமாகும். இருப்பினும் நாம் இதனை சாதாரண விடயமாக நினைக்கவில்லை.

அந்த யுவதிக்கு ஏற்றப்பட்ட அதே வகையான தடுப்பூசி கண்டி போதனா வைத்தியசாலையில் பயன்படுத்திய மேலும்இருநோயாளர்களுக்கு ஒவ்வாமை ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கு தேவையான சிகிச்சைஅளிக்கப்பட்டுள்ளது. பேராதனை மற்றும் கண்டி போதனாவைத்தியசாலைகள் உட்பட நாட்டின் ஏனைய வைத்தியசாலைகளுக்கு 10 தொகுதிகளுக்கும் அதிகமான மருந்துப் பொருள்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன.

முழுமையாக அந்த மருந்துகளை அகற்றியுள்ளோம். அதனை நாம் பயன்படுத்தப் போவதில்லை. அதற்காகபுதியதொரு மருந்தையே பயன்படுத்த எதிர் பார்த்துள்ளோம். புதிய மருந்தையே நாம் தற்போது பயன்படுத்துகிறோம். சோதனைகளின் போது தவறுகள் இடம்பெறலாம். அதனை நாம் மறுக்கவில்லை. மருந்து இறக்குமதி செய்த பிறகு அது தொடர்பில் பரிசோதிக்கும் முறைமை எம்மிடமுள்ளது. அதனையே நாம் தற்போது முன்னெடுத்துள்ளோம். - என்றார். (05)

# நிகழ்நிலை ஊடாக வெளிநாட்டுக் கடவுச்சீட்டு; 15 நாள்களுக்குள் 30 ஆயிரம் விண்ணப்பங்கள்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு தகவல்

நிகழ்நிலை முறைமை ஊடாகவெளிநாட்டுகடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்கு கடந்த மாதத்தில் மாத்திரம் 29 ஆயிரத்து 579 பேர் விண்ணப்பித்துள்ளனர். 5 ஆயிரத்து 294 பேர் ஒரு நாள் சேவைக்காகவும், 24 ஆயிரத்து 285 பேர் சாதாரண சேவைக்காகவும் விண்ணப்பித்துள்ளனர்எனப் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

நிகழ்நிலை முறைமையில் விண்ணப்பங்களை சமர்ப்பித்து பிரதேச செயலக பிரிவுகள் ஊடாக வெளிநாட்டு கடவுச்சீட்டுக்களை விநியோகிக்கும் சேவை கடந்த மாதம் 15ஆம்திகதிமஹரகமபிரதேச செயலக பிரிவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இதற்கமையகடந்தஜூன் மாதம் 15 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரையான 15 நாள்களுக்குள் மாத்திரம் 51 பிரதேச செயலகப் பிரிவுகள் ஊடாகவெளிநாட்டுகடவுச்சீட்டு பெற்றுக்கொள்வதற்காக 29 ஆயிரத்து 579 பேர் விண்ணப்பித்துள்ளனர்.

வெளிநாட்டு கடவுச்சீட்டைப் பெற்றுக்கொள்வதற்காக பத்தரமுல்லைகுடிவரவுகுடியகல்வு திணைக்களத்தில் ஏற்பட்ட சன நெரிசல், கடவுச்சீட்டு விநியோகத்தில் இடம்பெற்ற மோசடி ஆகிய காரணிகளை கருத்திற்கொண்டுகடவுச்சீட்டு விநியோக சேவையை இலகுபடுத்த பிரதேச செயலகங்கள் ஊடாகக்கைரேகை பதிவு மற்றும் கட்டணம் செலுத்தல் ஆகிய சேவைகள் நிர்வாக மாவட்டங்களில் இருந்து தெரிவுசெய்யப்பட்ட 51 பிரதேச செயலகங்களில் அறிமுகப்படுத்தப்பட்டன. (05)

# பாடசாலைக்காணியில் இறைச்சி மடுவம் சுற்றிவளைப்பில் 4 சந்தேகநபர்கள் கைது

பதுளை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட போதைப் பொருள் தடுப்பு பிரிவினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை பதுளையில் உள்ள பாடசாலை காணி ஒன்றில் சட்ட விரோதமான முறையில் அமைக்கப்பட்டிருந்த இறைச்சி மடுவத்தை சுற்றி வளைத்துநான்குமாடுகளின் இறைச்சியுடன் நான்கு சந்தேகநபர்களை கைது செய்துள்ளனர்.

மேலும் இறைச்சிக்காக வெட்டப்படவிருந்தநிலையில் காணப்பட்ட 3 வயதான கன்றுக்குட்டிகளையும் பொலிஸார் மீட்டுள்ளனர்.

இந்த இடத்தில் சட்ட விரோதமான முறையில் கால்நடைகளை அறுத்து, நகரிலுள்ள மாட்டிறைச்சி கடைகளுக்கு இறைச்சி வழங்கப்பட்டுள்ளமைவிசாரணைகளின்போது தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

பதுளைவிசேடபொலிஸ் பணியகத்துக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில், பதுளை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுஜித் வெதமுல்லவின் பணிப்புரையின் பேரில் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (05)

# ரயில் பாதையில் நீக்கப்பட்ட தண்டவாளங்கள் திருட்டு விசாரணைகள் ஆரம்பம்

புனரமைக்கப்பட்ட அநுராதபுரம் - ஓமந்தை ரயில் பாதையில்தண்டவாளங்கள் திருடப்பட்ட சம்பவம் தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

ரயில்பாதைபுனரமைப்பு பணிகளின்போது நீக்கப்பட்ட தண்டவாளங்களைக் கொண்டு சென்ற நபர்கள், யாழ். ராணி ரயிலில் மோதியதையடுத்து இந்த கொள்ளைச் சம்பவம் தொடர்பில் தெரியவந்ததாக ரயில்வே பாதுகாப்பு அத்தியட்சகர் அநுர பிரேமரத்ன தெரிவித்தார்.

இதனையடுத்து சந்தேக நபர்கள் தப்பியோடியுள்ளனர். இந்தச் சம்பவம் இடம்பெற்ற இடத்தில் ரயில் தண்டவாளங்களை வெட்டுவதற்காக பயன்படுத்தப்பட்ட எரிவாயு கட்டர், ஒட்சிசன் தாங்கி மற்றும் 5 கிலோ கிராம் எரிவாயு சிலிண்டர் என்பனவும் கைப்பற்றப்பட்டன என அநுர பிரேமரத்ன தெரிவித்தார்.

இது தொடர்பில் அநுராதபுரம் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# அம்பாறையில் தேரரை தாக்கியவர்களை ஏன் கைதுசெய்யவில்லை?

## பொலிஸாரை கேட்கிறார் விமலவீர திஸாநாயக்க

போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்குஅறிவுரைகூறியதன் பின்விளைவே தேரர் மீதான இந்தத் தாக்குதலாகும். எனினும், தாக்குதல் மேற்கொண்டவர்கள் சுதந்திரமாக நடமாடுகின்றனர். இந்தத் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டு பொலிஸார் இருக்கின்றனர். இதனால் எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கிறது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது என விமலவீர திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

முன்னாள் வனஜீவராசிகள்பாதுகாப்புஇராஜாங்க அமைச்சரும் அம்பாறை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான விமலவீர திஸாநாயக்க, அம்பாறையில் அமைந்துள்ள தனது அலுவலகத்தில் நடத்திய விசேடசெய்தியாளர்சந்திப்பில் கலந்துகொண்டபோதே இவ்வாறு கூறியுள்ளார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் -

கடந்த ஜூலை 10 ஆம் திகதி மாலை 7 மணியளவில் அம்பாறை மாவட்டம் தமண பிரதேசசெயலகத்துக்குட்பட்ட பௌத்த விகாரை ஒன்றின் தேரர் ஒருவர் சிலரால் தாக்கப்பட்ட நிலையில், தற்போது சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அந்த தேரர் மீது ஐவர் கொண்ட குழு தாக்குதல் மேற்கொண்டிருந்ததாக அறிய முடிகிறது. தற்போது தாக்குதல் இடம்பெற்று 6 நாள்கள்கடந்தும்கூட பொலிஸாரால் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

தேரரை தாக்கியவர்கள் எனக் கூறப்படுபவர்கள் சுதந்திரமாகநடமாடுகிறார்கள். இவர்களுக்கு அரசியல் புலம் உள்ளதாக சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது.

மேலும், தேரர் அப்பகுதியில் மேற்கொள்ளப்படவிருந்த போராட்டத்தில் பங்கேற்பதற்கு சென்றவர்களுக்கு அறிவுரை கூறியமையே தேரர் மீதான தாக்குதலுக்கு காரணமாக அமைந்திருக்கிறது. பொலிஸார் இந்த விடயத்தில் அமைதியாகஇருக்கின்றனர்.

இதில் தமண பொலிஸ் பொறுப்பதிகாரிபொறுப்புக்கூற வேண்டியவர் ஆவார். எனி னும், அவர் பாரபட்சமாக உள்ளார் என்றே மக்கள் தெரிவிக்கின்றனர். இந்தத் தாக்குதலுக்கு உரிய நடவடிக்கை எதுவும் எடுக்காமல் வேடிக்கை பார்த்துக்கொண்டுபொலிஸார் இருக்கின்றனர்.

எமது நாட்டின் சட்டம் எங்கே செல்கின்றது என்ற கேள்வி மக்கள் மத்தியில் எழுகிறது.

தாக்குதல் மேற்கொண்டதாகக் கூறப்படும் 2 பேரை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தி பிணையில் விடுதலை செய்யப்பட்டிருப்பதாக பிந்திய தகவல் கிடைத்தது.

ஆனால், இந்தத் தாக்குதல் விடயத்தில் பக்கச்சார்பாக பொலிஸார் நடப்பதை ஏற்கமுடியாது. இந்த விடயத்தைச் சாதாரணமாகக் கடந்துவிட முடியாது. மக்கள் போராட்டம் ஏற்பட வாய்ப்புள்ளதாகவே இந்த விடயத்தில் தெரிவிக்க விரும்புகின்றேன். - என்றார். (05)

# நாடு அடைந்துள்ள வீழ்ச்சியை ஒரே தடவையில் மீட்க முடியாது

## ஐ.தே.க. உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் கருத்து



நாடு அடைந்துள்ள வீழ்ச்சியை ஒரே தடவையில் மீட்டெடுக்க முடியுமா? வீழ்ச்சியை கட்டம் கட்டமாகவேசீர்செய்ய வேண்டியுள்ளது. எனவே, அதற்கு உதவி புரியுங்கள். எதிர்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும். எமது கட்சி மற்றும் எமது தலைவரின் நிலைப்பாடே இன்று வெற்றி பெற்றுள்ளது என ஐக்கிய தேசிய கட்சியின் உப தலைவர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

அத்தனகல பகுதியில் நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது -

ஏதேனும் சிறியதொரு விடயத்தை பற்றிக்கொள்கிறார்கள். அடைந்துள்ளவீழ்ச்சியை ஒரே தடவையில் மீட்டெடுக்க முடியுமா? கட்டம் கட்டமாகவே பொருளாதார வீழ்ச்சியை சீர் செய்கிறோம் என்பது உங்களுக்கு தெரியும். எனவே அதற்கு உதவி புரியுங்கள். எமது நாட்டில் இரண்டு தரப்பினரே இருக்க வேண்டும். வங்குரோத்து அடைந்த நாட்டை மீட்டெடுக்க முயற்சிக்கும் தலைவருக்கு உதவி செய்யும் தரப்பினர் மற்றும் அரசியல்நோக்கத்துக்காக அதனை தடுத்து தாம் அதிகாரத்துக்கு வர முயற்சிக்கும் தரப்பினர். இந்த இரண்டு தரப்பினர்கள் மாத்திரமே இருக்க முடியும். எதிர்காலத்தில் நாம் அனைவரும் இணைந்து ஆட்சி அமைக்க வேண்டும். இருப்பினும் இதில்ஐக்கியதேசியகட்சி முன்னிலையில் இருக்க வேண்டும். எமது கட்சி மற்றும் எமது தலைவரின் நிலைப்பாடே இன்று வெற்றி பெற்றுள்ளது. கட்சி பேதமின்றி அனைவரும் ஒன்றிணைய வேண்டும். - என்றார். (05)

# 3 கஜமுத்துக்களுடன் ஒருவர் அதிரடிப்படையினால் கைது!

## அம்பாறையில் சம்பவம்



சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞனிடம் அம்பாறை விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட சோதனையின்போது கஜமுத்துக்கள் மீட்கப்பட்டதோடு, குறித்த இளைஞர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் இடம்பெற்றுள்ளது.

யானைகளை கொன்று பெறப்பட்ட 3 அரியவகை கஜ முத்துக்களை வைத்திருந்த சீதுவை பிரதேசத்தை சேர்ந்த 21 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைதானார்.

அம்பாறை விசேட அதிரடிப்படை முகாம் அதிகாரிகளுக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில், அம்பாறை பொலிஸ் பிரிவில் உள்ள பஸ் நிலையத்துக்கு அருகில் சோதனை நடத்தப்பட்டபோதே, கஜமுத்துக்கள் மூன்றை வைத்திருந்த இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக விசேட அதிரடிப்படையினர் சந்தேக நபரை அம்பாறை தலைமையக பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளனர். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# பெற்றோல் ஊற்றித் தற்கொலைக்கு முயன்றவரை காப்பாற்றிய பொலிஸ்

யாழ்.அச்சுவேலிபொலிஸ் நிலையத்துக்குஅருகில்உள்ள காணியில் தனக்குத்தானே பெற்றோலை ஊற்றிக் கொண்டு தற்கொலைக்கு முயன்ற நபரை பொலிஸார் காப்பாற்றியுள்ளனர்.

தன் மகள் தொடர்பில் அயல் வீட்டார் இழிவாக பேசியது தொடர்பாக பொலிஸார் நடவடிக்கை எடுக்க தவறிவிட்டதாக தெரிவித்து அச்சுவேலி பொலிஸ் நிலையத்துக்கு அருகில் உள்ள காணியில் தனக்கு தானே பெற்றோலை ஊற்றி தற்கொலை செய்ய முயற்சித்துள்ளார்.

விரைந்து செயல்பட்ட பொலிஸார் குறித்த நபரை மடக்கிப்பிடித்து தற்கொலை முயற்சியில் இருந்து காப்பாற்றியுள்ளனர். ஆவரங்கால் - சர்வோதயா பகுதியைச் சேர்ந்த நபரே இவ்வாறு காப்பாற்றப் பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும்தெரியவருவதாவது,

கடந்த ஒரு வாரத்திற்கு முன் ஆவரங்கால் சர்வோதயாபகுதியில்18வயது இளைஞன் ஒருவன் அயல் வீட்டுப்பெண்ணைகாதலித்து இருவரும்சுயவிருப்பில்திருமணம்செய்ய சென்றுள்ளனர். இந்தசம்பவத்தைதொடர்ந்து பெண் வீட்டார் மேற்படி இளைஞனின் வீட்டுக்கு சென்று தாக்குதலை மேற்கொண்டுசொத்துக்களுக்கும் சேதம் ஏற்படுத்தியிருந்தனர்.

இந்தசம்பவம்தொடர்பில் பாதிக்கப்பட்ட இளைஞனின் வீட்டார் அச்சுவேலி பொலிஸ் நிலையத்தில் செய்த முறைப்பாட்டுக்கு அமைய பெண்ணின் தந்தை மற்றும் பெரிய தகப்பனார் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் முற்படுத்தப்பட்ட நிலையில் பிணையில் விடுவிக்கப்பட்டனர். இந்நிலையில், சம்பவத்துடன் தொடர்புடைய பெண் வீட்டார் உள்ளிட்ட மேலும் 5 சந்தேகநபர்களைக் கைது செய்யவும் நீதிமன்றம் பொலிஸாருக்கு உத்தரவு வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் குறித்த 5 சந்தேகநபர்களையும் பொலிஸ் நிலையத்தில் முன்னிலையாகுமாறு பொலிஸார் அறிவித்துள்ள நிலையில், தவறு செய்யாத தாம் ஏன் முன்னிலையாக வேண்டும்? தனது மகளை அவதூறாக பேசிய அயல் வீட்டார்மீது நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் கூறி தனக்குத்தானே பெற்றோல் ஊற்றி தற்கொலைக்கு முயற்சித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது. (05)

# போக்குவரத்துப் பொலிஸாரை மோதிய மோட்டார் சைக்கிள்!

## வவுனியாவில் ஒருவர் கைது

வவுனியாவில் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸாரை மோட்டார் சைக்கிள் ஒன்று மோதியதில் பொலிஸார் காயமடைந்துள்ளதுடன், ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞாயிற்றுக்கிழமைஇரவு இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது -

வவுனியா, தாண்டிக்குளம் பகுதியில் வீதிக் கடமையில் இருந்த போக்குவரத்து பொலிஸார் வீதியால் சென்ற மோட்டார் சைக்கிள் ஒன்றை வீதியின் குறுக்காகசென்றுவழிமறித்த போது கட்டுப்பாட்டை இழந்த மோட்டார் சைக்கிள் போக்குவரத்துபொலிஸாருடன்மோதி விபத்துக்குள்ளானது.

குறித்தவிபத்தில்போக்குவரத்து பொலிஸார் ஒருவர் காயமடைந்து வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த மோட்டார் சைக்கிளின் சாரதி வவுனியா பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இதுதொடர்பாக வவுனியா பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (05)

# கொழும்பு துறைமுக நகரத்தின் செயற்கைக் கடற்கரை திறப்பு

கொழும்புதுறைமுகநகர வளாகத்தில்நிர்மாணிக்கப்பட்ட செயற்கை கடற்கரை ஞாயிற்றுக்கிழமை (17) திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஞாயிற்றுக்கிழமைமுதல் இந்தசெயற்கைகடற்கரையை நாட்டு மக்களும் வெளிநாட்டு சுற்றுலா பயணிகளும் இலவசமாக பார்வையிடும் வாய்ப்புவழங்கப்பட்டுள்ளது.

இந்த கடற்கரை சுமார்மூன்றரைகிலோமீற்றர் நீளம் கொண்டுள்ளது.

இந்த செயற்கை கடற்கரைக்கு மேலதிகமாக அதற்கு அருகில் உள்ளூர் மற்றும் வெளிநாட்டு உணவுகளுடன் கூடிய உணவுவிற்பனைவளாகமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது. (05)

# நண்பர்களுடன் ஆற்றில் நீராடச் சென்றவர் சாவு

பன்னலநாலவலானபிரதேசத்தில்மாஓயாஆற்றில்நீராடச் சென்ற இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார் என பன்னல பொலிஸார் தெரிவித்தனர். கொலபட்டானர், ஹங்கலா கடாபுலா பகுதியைச்சேர்ந்த 23 வயதுடைய மினல் பொடிகஹவன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

நண்பர்கள் குழுவுடன் நீராடச்சென்றபோதே இந்த துயரச் சம்பவம் நேர்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (05)

# இஞ்சி விலை எகிறியது!

*தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் ஒரு கிலோ இஞ்சியின் விலை ரூபா 1,100 முதல் ரூபா 1,200 வரையில் விற்பனை செய்யப்பட்டுவந்த நிலையில் தற்போது ஒரு கிலோ இஞ்சியின் சில்லறை விலை 2,400 ரூபாவாக அதிகரித்துள்ளது.*

*இஞ்சியின் விளைச்சல் குறைந்ததால் இஞ்சியின் விலை உயர்ந்துள்ளதாக மொத்த வியாபாரிகள் தெரிவிக்கின்றனர். (05)*

# இலக்கியத்தில் இணைந்த பனை....

(4ஆம் பக்கத் தொடர்ச்சி........)

செய்திகளைக் குறிக்கும் ஓலைகளுக்கு நாளோலை என்றும், அரச ஆணையினைத் தாங்கிவரும் ஓலைகளுக்கு திருமந்திர ஓலை என்றும் , அக்காலத்தில் அழைக்கப்பட்டது. திருமணம் , இறப்புக்கு நீட்டோலை என்னும் பெயர் பயன்படுத்துப்பட்டாலும் அவற்றுக்குக் கென்று தனி ஓலைகளும் இருந்திருக்கின்றன. மணவினை ஓலை திருமணத்தையும் - சாவோலை இறப்பையும் காட்டிடஅமைந்திருந்தது என்பதை அறிகிறோம்.

**நீட்டோலைவாசியான்நின்றான்குறிப்பறியான் மாட்டாதவன் மரம்** -

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ ...... என்னும்பாட்டில்..... சாவோலை கொண்டொருவன் முன்னேவர என்று வருவது - ஓலை பற்றிய நிலைக்கு எடுத்துக்காட்டுகளாய் இருக்கிறது அல்லவா.

எங்களின் முன்னோர் தங்களின் மனத்தெழுந்த பல அறிவுக் கருவூலங்களை எல்லாம் - தமக்குப் பின்னால் வருகின்ற பரம்பரையும் அறிய வேண்டும் என்பதற்காக - எடுத்துக்கொண்ட அளப்பரும்பணிதான் ஏட் டில் யாவற்றையும் எழுதி வைத்தமை எனலாம்.

அவர்கள் அகத்தில் மட்டும் இவ்வரிய சிந்தனை ஏற்பட்டிருக்காவிட்டால் நாம் பலவற்றை இழக்கும் நிலைக்கு ஆளாகியிருப்போம் என்பதை மனமிருத்தல் அவசியமாகும். களிமண்ணில் எழுதினால் காலத்துக்கும் நிற்காது. கற்களில் எழுதுவது பெருங் கடினமாகும். மரப்பட்டைகளும் நின்று நிலைக்காது. விலங்குகளின் தோல்களில் எழுதுவது அறத்துக்கு ஒவ்வாதததது, எனவே இலகுவாய் கிடைப்பதும் , பெருஞ்சிரமம் இல்லாததுமான பனை ஓலையினைத் தேர்ந்தெடுத்தார்கள். அவர்களின் அந்த அறிவு பூர்வமான செயலினை எவ்வளவு பாராட்டினாலும் தகும் எனலாம்.

காகிதத்தில் அச்சடிக்கப்பட்ட நூல்கள் வந்தாலும் இன்றும் பழைய ஏட்டுச் சுவடிகள் காலத்தையும் கடந்து நிற்கின்றன என்றால் எங்களின் முன்னோர்களைக் கட்டாயம் கருத்திருத்த வேண்டியது அவசியம் அல்லவா !

ஓலைச் சுவடிகளைத் தயாரிப்பது சற்றுக் கடினமானதுதான். மிகவும் கவனமாய் அதனைக் கையாழுதல் வேண்டும். எல்லாப் பனையின் ஓலைகளையும் ஏட்டுக்குப் பயன்படுத்திட முடியாது. கூந்தல் பனை என்னும் பனையின் ஓலையே ஏட்டுக்கு ஏற்றதாக அமைந்திருந்தது. இதனை தாழிப்பனை என்றும் அழைத்தனர். இந்தவகையான பனை மரங்கள் சற்று வித்தியாசமானவை.

ஏனைய பனை மரங்கள் போல் இவைகள் இருக்க மாட்டா. இந்த வகையான பனைகள் வாழ்நாளில் ஒரே ஒரு முறைதான் பூக்கும் தன்மை வாய்ந்தனவாம். இந்தப் பனைகள் அறுபத்து ஐந்து அல்லது எழுபது ஆண்டுகள் சென்ற பின் தான் பூக்கும். ஒரு முறை பூத்த பின்னர் இவ்வகைப் பனைகள் காய்ந்து விடு மாம்.

ஏடுகள் எவ்வாறு தயாரிக்கப்பட்டன ! ஏடுகளில் எவ்வாறு எழு தினார்கள் ! ஏடுகளை எவ்வாறு பேணினார்கள் என்பதையெல்லாம் அறியும் ஆவல் எழுகிறதா ? விரைவில் ஏடுகளைத் தேடுவோம் !



குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City

கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்

பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு

15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!

சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்



அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்

(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)

பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா, ரம்பொடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்

தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்

Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park

கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம், ரம்பொடை ஆஞ்சனேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 200,000/-
பரப்பு 20 இலட்சம்

5th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்

Good Gift Property Developers (Pvt) Ltd




OKAYA
ELECTRIC VEHICLES
dsl
We lead the way...!
பெட்ரோல் பைக்குகளை பயன்படுத்துவதை
விட 77% இலாபமான பாவனைக்கு
The inEVitable
Future of Smart Mobility
FAAST-F4
140-160 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FAAST-F2T
80-85 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
FREEDOM
70-75 KM ஒருமுறை*
சார்ஜ் செய்தால்
Rs.550,000/- இருந்து
வண்ணத்தெரிவுகள்:
conditions apply*
இந்தியாவில் வேகமாக வளர்ந்து
வரும் மின்சார வாகனம்
2 வருட உத்தரவாதம்
3 இலவச சேவைகள்
Visit DSL EV Experience Center : # 525, Union Place Colombo 02
Hotline - 070 300 9555

காலைக்கதிர் Kalaikkathir

# யானைகளிடம் இருந்து பாதுகாக்கக் கோரி கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம்



காட்டு யானைகளின் அச்சுறுத்தலில் இருந்து பாதுகாக்குமாறு கோரி நேற்று (திங்கட்கிழமை) ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கிளிநொச்சி, கண்டவளை பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கல்மடுநகர் ரங்கன் குடியிருப்பு பகுதியில் தொடர்ச்சியாககாட்டுயானைகள்மக்கள் குடியிருப்புகளுக்குள்நுழைந்து அச்சுறுத்தி வருகின்றன.

மேலும் மக்களின் வாழ்வாதாரத்தையும்அழித்து வருவதுடன், உடைமைகளுக்கும் சேதம் ஏற்படுத்தி வருகின்றன.

இது தொடர்பாகப் பல தடவைகள் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு தெரிவித்திருந்த போதிலும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனத் தெரிவித்து குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

எனவே மேற்படி பிரச்சினைக்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (05)

## தடுப்பூசி ஏற்றிய பெண் குழந்தை திடீர் உயிரிழப்பு

தடுப்பூசி போடப்பட்ட நிலையில் சுகவீனமடைந்ததாக கூறப்பட்டும் நான்குமாதபெண்குழந்தையொன்று ஞாயிற்றுக்கிழமை உயிரிழந்துள்ளதாக குளியாபிட்டிய பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாபிட்டியபொலிஸ் பிரிவுக்குட்பட்ட இஹல கொமுவ பிரதேசத்தைச் சேரந்த டபிள்யூ.எஸ்.நிம்னாதி திஸாநாயக்க என்ற குழந்தையே இவ்வாறு உயிரிழந்துள்ளது.

வாயில் இருந்து சளி மற்றும் மூச்சு விடுவதில் சிரமம் காரணமாக குளியாபிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட குழந்தையே இவ்வாறு உயிரிழந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 15ஆம் திகதி ஹெட்டிபொலசுகாதாரவைத்திய அதிகாரி காரியாலயத்தால் குறித்தகுழந்தைக்குதடுப்பூசி போடப்பட்டதாகவும் மறுநாள் குழந்தைக்கு சுகவீனம் ஏற்பட்டதாகவும் குழந்தையின் தந்தை தெரிவித்தார் எனப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

குழந்தையின் மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை குளியாபிட்டிய பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (05)

# வைத்தியசாலை உயிரிழப்புகளின் பின்னணியில் பெரும் சதித் திட்டம்

## சாகர இப்படிக் கருத்து



தரமற்ற மருந்துகளால் நாட்டில் உயிரிழப்புக்கள் இடம்பெறுவதாகக்கூறப்படும் சம்பவங்களின் பின்னணியில் பாரியதொரு சதித்திட்டம் உள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளரான நாடாளுமன்ற உறுப்பினர் சாகரகாரியவசம்தெரிவித்தார்.

கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதேஅவர்இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அந்தவிடயம்தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

கடந்த காலங்களில் போராட்டங்கள் ஊடாக, நாட்டை அழிவுக்கு இட்டுச் செல்லும் சதித்திட்டமே மேற்கொள்ளப்பட்டது.

கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக அநுராதபுரத்தில் சத்தியப்பிரமாணம்செய்துகொள்ளப்பட்ட நாளில் இருந்து இந்த சதிக்கான திட்டம் தீட்டப்பட்டது.

இதன் விளைவாக அரசாங்கத்தை கவிழ்த்து, ஜனாதிபதியையும் அவர்கள் விட்டியடித்தார்கள்.

எரிபொருள் இல்லாமல் பல நாள்கள் வரிசையில் நிற்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

12 மணித்தியாலங்களுக்கும் மேல் மின்வெட்டு நீடித்தது. வீட்டுக்கு கொண்டு வந்த எரிவாயு சிலிண்டர்கள் வெடித்தன.

இவ்வாறுபலபிரச்சினைகள்அன்றுஇருந்தநிலையில், கோட்டாபய ராஜபக்ஷ இராஜினாமா செய்து ஒரு வாரத்துக்குள்ளேயே, நாட்டில் வரிசை யுகம் இல்லாது போனது. மின்வெட்டும் இல்லாது போனது. எரிவாயு சிலிண்டரும்எங்கும்வெடிக்கவில்லை.

ஒரு டொலர் கூட வராமல் எப்படி இது சாத்தியமாகும்? இப்போதும் இதேபோன்றதொரு சதித்திட்டம்தான் நாட்டில் அறங்கேறி வருகிறது. மருந்துகள் விமடைவதாகக் கூறப்படுகிறது. இது ஒரு சதித்திட்டமாகும். இந்த விடயம் தொடர்பாக சுகாதார அமைச்சர் தேடிப்பார்க்க வேண்டும்.

இந்த நாட்டை இல்லாதொழிக்கும் ஒரு குழுவினர், அரச சேவையிலும் உள்ளார்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது'எனஅவர் மேலும்குறிப்பிட்டுள்ளார். (05)



# இலங்கையின் கடன் மறுசீரமைப்பு விரைவிலேயே நிறைவடையக்கூடும்

## அமெரிக்க திறைசேரி செயலாளர் நம்பிக்கை



சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்துடன்தொடர்புடைய மதிப்பாய்வுகளை சரியான முறையில் இலங்கை மற்றும் கானாவுக்கு முன்னெடுக்க முடியும் எனத் தாம் நம்புவதாக அமெரிக்க திறைசேரி செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஆரம்பமாகியுள்ள, ஜி-20 உச்சி மாநாட்டுக்கு முன்னதாக நடத்தப்பட்ட செய்தியாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போதுதொடர்ந்தும் உரையாற்றிய அவர் -

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் திட்டத்துடன் தொடர்புடைய மதிப்பாய்வுகளை சரியான முறையில் இலங்கை மற்றும் கானாவுக்கு முன்னெடுக்க முடியும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

கடன்களைப் பெற்றுக்கொண்ட நாடுகள் மற்றும் பிற பங்குதாரர்களுக்கு செயல்முறை பற்றிய தெளிவைவழங்க, கடன் மறுசீரமைப்பு பயனர் வழிகாட்டி அவசியம் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

சர்வதேச நாணய நிதியம் உலகின் ஏழ்மையான நாடுகளுக்கு பூச்சிய வட்டிக் கடன்களை வழங்குவதாகவும் அது உறுதியான நிதி நிலைப்பாட்டில் வைக்கப்பட வேண்டும் எனவும்சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், உள்நாட்டு நிதி ஆதாரங்களைப் பயன்படுத்துவது உள்ளிட்ட பல நிதி தொடர்பான ஆலோசனைகளை வழங்க, சர்வதேச நாணய நிதியம் உதவ வேண்டும் என்றும் இவ்வாறான செயற்பாடுகளு;கது உதவ அமெரிக்க திறைசேரி தயாராக உள்ளதாகவும் அமெரிக்க திறைசேரியின் செயலாளர் ஜெனட் யெலன் தெரிவித்துள்ளார். (05)

# நவாலியூர் சோமசுந்தரப் புலவரை போற்றி வழிபடும் நிகழ்வு யாழில்

## ஆடிப் பிறப்பன்று முன்னெடுப்பு



ஆடிப்பிறப்பு நாளில் நாவாலியூர்சோமசுந்தரப் புலவரைப் போற்றி வழிபடும் முகமாக விசேட நிகழ்வொன்று யாழ்ப்பாணத்தில் நேற்று (திங்கட்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

தங்கத் தாத்தா பேரவையின் ஏற்பாட்டில் யாழ்ப்பாணம் மத்திய பஸ் நிலையத்துக்கு முன்பாகவுள்ளநவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலையடியில் நேற்று காலை குறித்த நிகழ்வு இடம்பெற்றது.

இதன்போது நாவாலியூர் சோமசுந்தரப் புலவரின் சிலைக்கு மாலை மற்றும்சால்வைஅணிவித்து பூக்கள் தூவப்பட்டன.

ஆடிப்பிறப்பு விசேட உணவுப் பண்டமான ஆடிக்கூழ் தயாரிக்கப்பட்டு அப்பகுதியில்நின்றபொதுமக்களுக்கும் வழங்கப்பட்டது.

எதிர்வரும்காலங்களில் ஆடிப்பிறப்பு நாளில் நாவாலியூர் சோமசுந்தரப் புலவரை போற்றும் வகையில்நிகழ்வை மேற்கொள்ள அனைவரும் முன்வர வேண்டும் என கே.எஸ். சிவஞானராஜாஅழைப்புவிடுத்தார். (05)

# ஜூலை முதல் இரண்டு வாரங்களில் 55 ஆயிரம் சுற்றுலாவிகள் வருகை

ஜூலைமுதல்இரண்டுவாரங்களில் 55 ஆயிரத்துக்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

ஜூலை மாதத்தில் இதுவரை 55 ஆயிரத்து 566 சுற்றுலாப் பயணிகள் வந்துள்ளனர் என இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையால் வெளியிடப்பட்ட சமீபத்திய தரவுகள் தெரிவிக்கின்றன.

ஜூலை மாதத்தில் 8 ஆயிரத்து 169 இந்திய பிரஜைகள் வந்துள்ளதால், இந்தியாவில் இருந்து வரும் பார்வையாளர்கள் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் தொடர்ந்து ஆதிக்கம் செலுத்துகின்றனர்.

இதற்கிடையில், பிரித்தானியாவில் இருந்து 4 ஆயிரத்து 474 பேரும் சீனாவிலிருந்து 2 ஆயிரத்து 893 சீன பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்துள்ளனர்.

மேலும், ஜேர்மனியில் இருந்து 2 ஆயிரத்து 824 பேரும் ரஷ்யாவிலிருந்து 2,599 சுற்றுலாப் பயணிகளும் இந்த மாதத்தில் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

ஜூன் மாதத்தில் மொத்தம் 100,388 சுற்றுலாப் பயணிகள் வந்தனர் எனவும் அதன்படி, இந்த வருடத்தில் இதுவரை 680,440 சுற்றுலாப் பயணிகள் நாட்டிற்கு வருகைதந்துள்ளனர் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# வடக்கு மாகாண சபை அலுவலகம் முன்பாக டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் போராட்டம்





வடமாகாண டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் வட மாகாண சபை முன்பாக கவனஈர்ப்புப் போராட்டத்தில் நேற்று (திங்கட்கிழமை) ஈடுபட்டனர். சம்பள உயர்வு மற்றும் நிரந்தர நியமனம் ஆகிய கோரிக்கைகளை முன்வைத்தே அவர்கள் இத்தப்போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். 2016 ஆண்டு முதல் வட மாகாணத்தில் 82 டெங்கு ஒழிப்பு உதவியாளர்கள் நியமிக்கப்பட்டு 22 ஆயிரம் ரூபா வீதம் சம்பளம் வழங்கப்பட்டு வருகிற போதிலும் அதில் எந்தவித மாற்றங்களும் செய்யப்படவில்லை என அவர்கள் தெரிவித்துள்ளனர். அத்துடன் வட மாகாண பிரதம செயலர் எஸ்.எம். சமன் பந்துலசேனவிடம் இது தொடர்பான மகஜர் ஒன்றை அவர்கள் கையளித்துள்ளனர். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன் போராட்டக்காரர்களைச் சந்தித்து அவர்களின் குறைகளைக் கேட்டறிந்தார். (05)

## கனேடிய உயர் ஸ்தானிகருடன் சிறீதரன் எம்.பி. விசேட சந்திப்பு



இலங்கைக்கான கனேடியத் தூதரகத்தின் உயர்ஸ்தானிகர் எரிக் வோல்ஸ்க்கும், நாடாளு மன்றஉறுப்பினர்சிவஞானம் சிறீதரனுக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்று (திங்கட்கிழமை) யாழில் இடம்பெற்றது.

இதன்போது, தமிழர்கள் நலன்சார்செயற்பாடுகளிலும், இனஅழிப்புக்கானநீதிகோரல் செயன்முறையிலும் கனடா அரசாங்கம் தொடர்ச்சியாக குரல்கொடுத்து வருவதற்கு தனது நன்றியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் வெளியிட்டார்.

இலங்கையில் நடைபெற்றது இன அழிப்புத்தான் என்பதையும் அதற்குரிய நீதி நிலைநாட்டப்பட வேண்டும் என்பதையும் வலியுறுத்தி கனேடிய நாடாளுமன்றத்தில் கொண்டுவரப்பட்ட பிரேரணைக்கு ஆதரவாக, அப்பிரேரணைக்கு வலுச்சேர்க்கும் வகையில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் கிளிநொச்சி மாவட்டக்கிளையால் நடத்தப்பட்ட நிகழ்வையும் கனேடிய உயர்ஸ்தானிகர் நினைவுகூர்ந்திருந்தார்.

அர்த்தமுள்ள அதிகாரப் பகிர்வு, பல்லின சமூகங்கள் வாழும் கனேடிய நாட்டைப் பின்பற்றி இலங்கையில் சமஷ்டியை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ள யதார்த்தப் புறநிலைகள், வடக்கு - கிழக்கின் 80 வீதமான நிலங்கள் வனவளத்திணைக் களம், வனஜீவராசிகள் திணைக்களம், கடலோர காவல் திணைக்களம், தொல்பொருளியல் திணைக்களம் என்பவற்றால் தொடர்ச்சியாக பறிக்கப்படுகின்றமை, இன, மத, மொழி ரீதியான ஆக்கிரமிப்புகள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

போருக்குப் பின்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் இராணுவத்தினரால் அபகரிக்கப்பட்டுள்ள 4374.8 ஏக்கர் காணிகள் தொடர்பான விவரமும், 2009இக்குப்பின்னர் வடக்கு கிழக்கிலுள்ள தமிழர்களின் பூர்வீகநிலங்களைஅபகரித்து, அவ்விடங்களில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள 71 விகாரைகள் குறித்தும் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரனால், கனேடிய உயர்ஸ்தானிகரிடம்விரிவான அறிக்கையொன்றும் கையளிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## வவுனியாவில் ஆடிப்பிறப்பு கோலாகல கொண்டாட்டம்










வவுனியாவில் தர்மலிங்கம் வீதியிலுள்ள சோமசுந்தரப்புலவர் நினைவுச்சிலையடியில் நேற்று (திங்கட்கிழமை) ஆடிப்பிறப்பு நிகழ்வுகள் இடம்பெற்றன.

வவுனியா மாநகரசபை மற்றும் ஒட்டோ உரிமையாளர் சங்கத்தின் ஏற்பாட்டில் தர்மலிங்கம் வீதியில் அமைந்துள்ள நவாலியூர்சோமசுந்தரப்புலவரின் நினைவுத்தூபியில் ஓட்டோ உரிமையாளர் சங்கத்தலைவர் ரவீந்திரன் தலைமையில் இந்த நிகழ்வுகள் இடம்பெற்றன.

இந்நிகழ்வில் அன்னாரின் நினைவுத்தூபிக்கு மலர் மாலை அணிவித்து மலரஞ்சலி செலுத்தப்பட்டதுடன் நினைவுப் பேருரையும் நிகழ்த்தப்பட்டது.

இந் நிகழ்வில் மாநகரசபை செயலாளர் செந்தில்நாதன், முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் ஜி. ரி.லிங்கநாதன், முன்னாள் நகரசபை தலைவர் இ. கௌதமன், முன்னாள் நகரசபை உறுப்பினர்கள், சமூக ஆர்வலர்கள், பாடசாலை மாணவர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். இதன்போது ஆடிப்பிறப்பை முன்னிட்டு கூழ், கொழுக்கட்டையும் கலந்துகொண்டவர்களுக்கு வழங்கப்பட்டன. (05)

## வாலிபக் கவிஞர் !



கவியரசர் பாடல் கேட்டு
கையைக்கட்டி நின்ற வாலி
கட்டவிழ்த்து வந்து நின்று
கவி பொழிந்து நின்றாரே

வாலி பாடி நின்றபோது
போலிஅல்ல என்று சொல்லி
தோழ் கொடுத்து நின்றவரே
தோழமையில் கண்ண தாசன்

கண்ண தாசன் பாடலோடு
கைகுலுக்கி வாலி பாடல்
வண்ணமாக வந்த போதும்
வைரமாக நின்ற தங்கே

பக்தியோடு பாடி நின்றார்
பருவத்தார்க்கும் பாடி நின்றார்
நித்தமே நினிவில் நிற்க
தத்துவமும் பாடி வைத்தார்

வெற்றிலை போட்ட வாலி
வெற்றிகள் பலதைப் பெற்றார்
நெற்றியில் பொட்டு இன்றி
நின்றதே இல்லை நாளும்

மெட்டுக்காய் எழுதி நின்றார்
துட்டுக்காய் எழுதி நின்றார்
பொட்டுவைத்த நெற்றி ஓடு
பொறிபறக்க எழுதி நின்றார்

முருகன் பாடல் பாடிநின்று
முயன்றுவந்த வாலி நாளும்
அருமையான பாடல் தந்து
அமர்ந்துகொண்டார் உள்ளம் எல்லாம்

தெருவெலாம் வாலி பாடல்
தித்திப்பாய் ஒலிக்கும் போது
பெரு மனத்தோடு மக்கள்
பேணியே ஏற்று நின்றார்

காவியம் பாடிய வாலி
ஓவியமும் தீட்டி நின்றார்
கவியரங்கம் ஏறி நின்றார்
புவி நினைக்கப் பேசிநின்றார்

வாலியின் கவி கேட்டு
மதி மயங்கிப் பலருமே
கவியரசர் கவி என்று
தமை மறந்து நின்றார்கள்

சந்த மொடு சிந்தும்
கொண்ட தமிழ்ப் பாட்டு
எங்கள் மனம் அமர
தந்து நின்றார் வாலி

வாலிநீ போட்ட வேலி
வரலாற்றில் நிற்கும் ஐயா
போலிநீ இல்லை ஐயா
பொங்கிடும் தமிழின் ஊற்று

ஊழியுன் பாட்டு நிற்கும்
உலகுளோர் மனதில் நிற்பாய்
வாலிபக் கவிஞரே நீ
வையத்தில் என்றும் வாழ்வாய் !

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
(இன்று கவிஞர் வாலியின் நினைவுநாள். அதையொட்டி இந்தக் கவிதை வெளியாகின்றது)

## மன்னார் மாவட்ட செயலகத்தில் ஆடிக் கொண்டாட்ட பெருவிழா









ஆடிப் பிறப்பில் தமிழர் நாம் கூடிக் கொண்டாடிக் குதூகலிப்போம்' எனும் தொனிப்பொருளில் வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் அனுசரணையில், மன்னார் மாவட்ட செயலகம் ஏற்பாடு செய்த ஆடிப்பிறப்புக் கொண்டாட்ட நிகழ்வு நேற்று (திங்கட்கிழமை) காலை மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமேல் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் நவாலியூர்சோமசுந்தரப்புலவரின் உருவ படத்துக்கு மாலை அணிவிக்கப்பட்டு, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றதோடு ஆடி மாதத்தின் சிறப்பு தொடர்பாக விசேட சொற்பொழிவு இடம் பெற்றது. மேலும் வெசாக் பக்தி கீதத்தில் பங்குபற்றிய அலுவலர்களுக்கு சான்றிதழ் வழங்கி வைக்கப்பட்டது.

மேலும் ரன் விம வீடமைப்பு திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் 4 பேருக்கு முதல் கட்டமாக தலா ஒரு லட்சத்து 50 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலைகள் வழங்கி வைக்கப்பட்டன.

மேற்படி நிகழ்வில் சிறப்பு அம்சமாக மன்னார் மாவட்ட செயலகத்தின் சிரேஷ்ட கலாசார உத்தியோகத்தர் இ.நித்தியானந்தனின் சேவையைப் பாராட்டி அவருக்கு விசேட விருதும் வழங்கி கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (05)

காலைக்கதிர் Kalaikkathir

# ஆதன பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகர சபைக்குட்பட்ட வட்டாரம் 11 காரைதீவு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கங்கள் 396, 398 மற்றும் புனிதமரியாள் வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 3 என்பன பெயர்மாற்றம் செய்வது தொடர்பான அறிவித்தல். மேற்குறித்த ஆதனங்களில் காரைதீவு வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 396 ன் ஆதன பெயரானது எமது ஆதனப்பதிவேட்டில் சொந்தக்கார என பதியப்பட்டுள்ளது. காரைதீவு வீதியில் உள்ள 398 ன் ஆதன பெயரானது மரியாம்பிள்ளை பெண் பூமணி என காணப்படுகின்றது. புனிதமரியாள் வீதியில் அமைந்துள்ள ஆதன இலக்கம் 3 ன் ஆதன பெயரானது மடுத்தேசு தம்பிராசா என காணப்படுகின்றது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை மேற்கு சவரிமுத்து ஆசீர்வாதமும் பெண் மாசிலாமணியும் ஆகியோர் இலக்கம் 398 என்னும் ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு க.அ.வீரபாகு முகதாவில் 1946.06.18 ம் திகதி 25212 ம் இலக்கத்தில் நிறைவேறிய சீதன உறுதி மூலம் "பாராயடியும் வாடிக்கரையும்" என்னும் பெயருடைய விஸ்தீரணம் நிலப்பரப்பு ஒன்று அளவு கொண்ட ஆதனத்தை அவர்களது மகளாகிய மடுத்தேசு மரியாம்பிள்ளை பெண் பூமணி என அழைக்கப்படும் திரேசம்மாவிற்கு வழங்கியுள்ளனர். அவர் காலஞ்சென்ற பின்னர் நாவாந்துறை இல 596 காரைநகர் வீதியைச் சேர்ந்த மரியாம்பிள்ளை பொனிபாஸ். மரியாம்பிள்ளை அன்ரனிதாஸ். யோசப் பாநாந்து பிரான்சிஸ் பெண் சிசிலியா, பொன்னுத்துரை ஈஸ்வரன் பெண் மேரி றோஸ் ஆகியோர் 01.08.2003 ம் திகதி பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் நிறைவேறிய 1605 ம் இலக்க அறுதி உறுதி மூலம் மேற்படி ஆதனத்தில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 5.6 அளவுடைய ஆதனத்தை எலியாஸ் பேசுதாசனுக்கும் பெண் சகாயமலருக்கும் அறுதி விற்றுள்ளனர். எலியாஸ் யேசுதாசனும் சகாயமலரும் 31.01.2010ல் பிரசித்த நெரத்தாரிசு அ.இராசரட்ணம் முகதாவில் 5837ம் இலக்க நன்கொடை உறுதி மூலம் அவர்களது மகள் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவருக்கு தங்கள் சீவிய உரித்திற்கமைவாக குளி 5.6 அளவுடைய ஆதனத்தை நன்கொடையளித்துள்ளார்.

ஆதன இலக்கம் 396 ஆனது வண்ணார்பண்ணை மேற்கைச்சேர்ந்த சவரிமுத்து ஆசீர்வாதமும் பெண் மாசிலாமணியும், பானாந்து திரவியமும், பானாந்து இராசாவும், இ.பெஞ்சமினும் பெண் அடைக்கலமும் 02.08.1942ல் பிரசித்த நொத்தாரிசு சு.வீரபாகு முகதாவில் நிறைவேறிய 24398ம் இலக்க அறுதி உறுதி மூலம் "பாராயடியும் வாடிக்கரையும்" விஸ்தீரண நிலப்பரப்பு நான்கில் தென்மேற்கு பக்கமாக 1/4 பங்கினை மாணிக்கம் சிறில் என்பவருக்கு வழங்கியுள்ளார். இவ்வுறுதியில் 1927ம் ஆண்டு 17047 ல் நிறைவேறிய அறுதி உறுதியால் சவரிமுத்து ஆசீரவாதத்தினதும் மாசிலாமணியினதும் கொள்விலையும் ஆசீர்வாதம் பெண் மாசிலாமணியின் மரண சாசனமின்றி இறக்க பிள்ளைகளான பர்ணாந்து திரவியம். பர்ணாந்து இராசா ஆகியோரின் பிதாவழி முதுசமும் ஆக வந்தடைந்ததாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. அதன் பின்னர் மாணிக்கம் சிறிலின் பேரப்பிள்ளைகளான நாவாந்துறையை சேர்ந்த திருமதி ஞானதேவி வின்சிலோ. செல்வி வினி வின்சிலோ, வின்சிலோ பபிக்குமார் ஆகியோர் 16.07.2010 ம் திகதி பிரசித்த நொத்தாரிசு அ. இராஜரட்ணம் முகதாவில் 6462 ம் இலக்கத்தில் நிறைவேறிய அறுதி உறுதிப்படி இவ்வாதனத்தில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 5.5 அளவுகொண்ட ஆதனத்தை அவ்வூர் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவருக்கு வழங்கியுள்ளனர்.

நாவாந்துறை காரைதீவு வீதி இல 389 ல் வசிக்கும் திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவர் 5.09.2012ம் திகதி 718 ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் (ஒன்றுசோத்தல்) உறுதி மூலம் ஆதன இலக்கம் 398, 396ஆகிய இவ்விரு ஆதனங்களையும் 2010.01.31, 16.07.2010 ம் திகதியிலும் பிரசித்த நொத்தாரிசு அ.இராஜரட்ணம் முகதாவில் முறையே 5837, 6462 ம் இலக்கங்களில் நிறைவேறிய நன்கொடை, அறுதி உறுதிகளின் படி தனது சொந்தமும் ஆட்சியுமானது என்றும் இவ்விரு ஆதனங்களும் ஒன்று சேர்ந்து ஒரே எல்லைக்குள் காணப்படுவதனால் இவ்விரு ஆதனங்களின் விஸ்தீரணம் உறுதிகளின்படி முறையே குளி 5.6. குளி 5.5 இவை இரண்டும் இணைந்து குளி 11.1 ஆக காணப்படுகின்றது. இவ்வாதனம் நில அளவையாளர் கே.ருவரட்ணம் அவாகளால் 23.8.2012 ல் அளந்து வரைந்த 1096 ம் இலக்க நில அளவைப்படத்தில் குளி 10.53 ஆக காணப்படுகின்றது. அதன்பின்னர் இவ்வாதனத்தை திருமதி ஜெயசுதா சுயந்தகுமார் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சிவலிங்கம் இளங்கீரன் முகதாவில் 1747 ம் இலக்கத்தில் ;1.06.2013 ம் திகதி நிறைவேறிய அறுதி உறுதியில் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 10.53 ம் கிணறும் அதற்கு சேர்ந்தவைகளும் தனக்குப்பின் தனது மகன் இராஜசிறிக்கு சென்றடைய வேண்டும் எனும் நிபந்தனைக்கு அமைய இல 96 கடற்கரை வீதியைச் சேர்ந்த திருமதி. மரியமலர் இராஜநாயகம் என்பவருக்கு அறுதி உறுதி நிறைவேற்றியுள்ளார்.

ஆதன இலக்கம் 3 ஆனது நாவாந்துறை கடற்கரை வீதியில் வசிக்கும் நல்லையா தங்கராசா என்பவர் 2006.03.08ம் திகதி பிரசித்த நொத்தாரிசு அருளம்பலம் இராஜரட்ணம் முகதாவில் 3667 ம் இலக்கத்தில் நிறைவேறிய வெளிப்படுத்தல் உறுதிமூலம் வண்ணார்பண்ணை தென்மேற்கு இறையில் "பாராயடி" என்னும் நல்லையா தங்கராசா என்பவர் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 4.5 அளவுகொண்ட ஆதனத்தை 2010.09.07ம் திகதி பிரசித்த - நொத்தாரிசு யோகேஸ்வரி பாலசுப்பிரமணியம் முகதாவில் 2402 ம் இலக்கத்தில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் அதே ஊரைச்சோந்த தனது மகள் பொனான்டோ மேரி யோசெப்பினுக்கு நன்கொடையளித்துள்ளார். நாவாந்துறை ஐ சேர்ந்த பொனான்டோ மேரி யோசெப்பின் என்பவர் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 4.5 அளவுகொண்ட ஆதனத்தை 2014.01.14 ல் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் நாவலர் வீதி 1 ம் குறுக்குத்தெரு இல 4ஐ சேர்ந்த திருமதி மரியமலர் இராசநாயகம் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

திருமதி மரியமலா இராசநாயகம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சி.இளங்கீரன் முகதாவில் 14.01.2014 ம் திகதி 2455ம் இலக்கத்தில் நிறைவேறிய உறுதிப்படுத்தல் உறுதியில் இலக்கம் 1747, 2454 முறையே அறுதி, நன்கொடை உறுதிகள் மூலம் உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ். சுப்பிரமணியம் 2013.06.18 ம் திகதி வரைந்த 2406 ம் இலக்க நில அளவைப்படத்தில் துண்டு ; எனும் பாகம் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 14.31 என குறிப்பிடப்பட்டுள்ளது எனவும் உறுதிப்படுத்தியுள்ளார்.

இல 9 கடற்கரை வீதி நாவாந்துறையைச் சேர்ந்த இராசநாயகம் இராஜசிறி என்பவர் விஸ்தீரண நிலப்பரப்பு குளி 14.3 அளவுகொண்ட ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு ஸ்ரீ.ஜெயசித்திரா முகதாவில் 11.03.2022 ம் திகதி இல 4660 ல் நிறைவேறிய நன்கொடை உறுதி மூலம் இல 225/7 மோதறை கொழும்பு 15 என்னும் முகவரியைச் சோந்த தனது மைத்துனரான பர்னாந்து அருள்தாஸ் என்பவருக்கு நன்கொடையளித்துள்ளார்.

**ஆதன அட்டவணை**

ஆதன இலக்கம் 398, 396, 3 கொண்ட ஆதனங்கள் வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப் பகுதி கோவிற்பற்று வண்ணார் பண்ணை தென்மேற்கு இறை

இது யாழ்ப்பாணம் பிரதேச செயலகப் பகுதியில் யாழ் மாநகர சபை எல்லைக்குட்பட்ட 1/85 கிராம சேவகர் பிரிவில் உள்ள "பாராயடியும் வாடிக்கரையும்" நிலப்பரப்பு 1 குளி 15.03. இது தற்போது உத்தரவு பெற்ற நில அளவையாளர் எஸ் சுப்பிரமணியம் அவர்களால் 2013.06.18 ம் திகதி 2406 ம் இலக்கத்தில் பிரிவிட்டு அளந்த நில அளவைப்படத்தில் லொட் 1 என காட்டப்பட்ட பாகம் நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினான்கு தசம் மூன்று ஒன்று (-நிலபரப்பு 0 குளி 14.31) அதற்கு சேர்ந்தவைகளும் இந்த நிலப்பரப்பு 0 குளி 14.31 க்கும் எல்லைகள்

கிழக்கு - சென் மேரிஸ் ஒழுங்கை

வடக்கு - யோசப் பிரான்சிஸ் பெண் திஸ்கத்தின் ஆதனமும் இம்மனுவல் ஜீவமலரின் ஆதனமும்

மேற்கு - காரைநகர் வீதி

தெற்கு - வாய்க்காலும் காரைநகர் வீதியும்

இதனடங்கலும்

தற்போது இவ்வாதனத்தை பொனான்டோ அருள்தாஸ் என்பவர் தனது பெயரை எமது ஆதன வரிப் பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்ய விண்ணப்பித்துள்ளார். எனவே இவ்வாதனத்திற்கு முழுமையாகவோ அல்லது பகுதி அளவிலோ உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமை கோராதவிடத்துகுறித்த ஆதனமானது பொனான்டோ அருள்தாஸ் என்னும் பெயருக்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த அதனப்பெயர் மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ஆணையாளர்**
**மாநகர சபை**
**யாழ்ப்பாணம்**

## குளவி கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் உயிரிழப்பு

குளவி கொட்டுக்கு இலக்காகி வயோதிபப் பெண் ஒருவர் இன்று (17) உயிரிழந்தார்.

லிந்துலை - பம்பரகலை தோட்டத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

பம்பரகலை மத்திய பிரிவைச் சேர்ந்த 80 வயதான பெண்ணே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஓய்வுபெற்ற நிலையில், வீட்டிலிருந்தஅவர்,நாட்சம்பள அடிப்படையில் தேயிலைத் தோட்டத்தில் பணியில் ஈடுபட்டிருந்தார்.

இந்தநிலையில், வழமைபோல் இன்று கொழுந்து பறித்துகொண்டிருந்தபோதே அவர் குளவிக் கொட்டுக்கு இலக்காகினார்.

இதையடுத்து, உடனடியாக லிந்துலை பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லப்பட்டபோதிலும் அவர் உயிரிழந்தார்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா பொது வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

(02)

## மனைவியை வெட்டிக்கொலை செய்த கொடூர கணவன் கைது

குடும்பப் பெண்ணொருவர் வெட்டிப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் மொனராகலை - வெள்ளச்சிகடைப் பகுதியில் இன்று (17) இடம்பெற்றுள்ளது என்று பொலிஸார்தெரிவித்துள்ளனர்.

குடும்பத் தகராறு காரணமாக மனைவியைக் கணவன் இவ்வாறு கூரிய ஆயுதத்தால் வெட்டிக் கொலைசெய்துள்ளார் என்று ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர் அதே பகுதியில் வசிக்கும் 45 வயதுடைய மூன்று பிள்ளைகளின் தாய் என்று பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

உயிரிழந்தபெண்ணின் கணவன் மொனராகலை பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். (02)

## பருத்தித்துறை துறைமுகத்தில் ஒதுங்கியது ஆணின் சடலம்

யாழ்ப்பாணம், வடமராட்சி - பருத்தித்துறை கடற்கரையில் அடையாளம் தெரியாத ஆண் ஒருவரின் சடலம் கரையொதுங்கியுள்ளது.

பருத்தித்துறைதுறைமுக இறங்கு தளத்தில் நேற்றுக் காலை குறித்த சடலம் கரையொதுங்கியுள்ளது.

இது தொடர்பில் பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (02)

## நாட்டில் ஆட்சி மாற்றத்தினை ஏற்படுத்தியவை ஊடகங்களே

### முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கோடீஸ்வரன் தெரிவிப்பு



(வி.ரி. சகாதேவராஜா)

நாடு கடந்த ஆட்சியில் அதலபாதாளத்துக்குச்சென்று கொண்டிருந்தபொழுது ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியவை ஊடகங்களே. ஒரு நாட்டின் முதுகெலும்புஊடகம்என்றால் அது மிகைஅல்ல.

இவ்வாறு அம்பாறை மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன், காரைதீவில் வெற்றி நியூஸ் ஊடக மையத்தை திறந்து வைத்துப் பேசியபோது தெரிவித்தார்.

காரைதீவுவெற்றிநியூஸ் ஊடக மையத் திறப்பு விழா ஞாயிற்றுக்கிழமை மூத்த ஊடகவியலாளர்வி.ரி. சகாதேவராஜா தலைமையில் நடைபெற்றது.

முன்னதாக, கிழக்கிலங்கையின்புகழ்பெற்றசிவாச்சாரியார் சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் சமய வழிபாடு கிரியைகளை மேற்கொண்டு,, ஆசியுரை நிகழ்த்தி அதனை தொடக்கி வைத்தார். நாடாளுமன்ற உறுப்பினர் கவிந்திரன் கோடீஸ்வரன் நாடாவெட்டி புதிய ஊடக மையத்தை திறந்து வைத்தார்.

அங்கு கோடீஸ்வரன் தொடர்ந்து பேசுகையில் தெரிவித்ததாவது:

நாட்டிலே முன்னர் கோர ஆட்சி இடம்பெற்றது .ஏழு லட்சம் பேர் வேலை இழந்தார்கள். பிழையான கொள்கை, அத்தியாவசிய சேவை மற்றும் விவசாயத்திலே கை வைத்தார்கள். ஊழல்கள், மோசடிகள் மலிந்தன. நாடு பின் தள்ளப்பட்டது. இவற்றை வெளிச்சத்திற்குக் கொண்டுவந்து பெரும் ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்தியது ஊடகமே.

இன்று அத்தகைய ஊடகங்களுக்கு எதிராக நாடாளுமன்றத்தில் சட்டம் கொண்டுவர எத்தனிக்கிறார்கள். அப்படியானால் ஊடகங்களின் குரல்வளை நசுக்கப்படும். எனவே, ஜனநாயக கூட்டணியினரான நாங்கள் அதனை முற்றாக எதிர்க்கின்றோம்.



கடந்த காலத்திலே தமிழுக்கும் தேசியத்துக்குமாக பயணித்த சிவராம் ,நடேசன், நிமலராஜன் போன்றோர் படுகொலைசெய்யப்பட்டார்கள். ஆனால், இன்றும் அவர்கள்நினைவுகூரப்படுகின்றார்கள் என்றால் அவர்கள் பக்கச் சார்பின்றி நியாயமாக ஊடக தர்மத்தின்படி சேவை ஆற்றியவர்கள்.

எனவே, சமூக ரீதியாக நீங்கள் இயங்கி பக்கச்சார் பற்றுச் சிறப்பாகச் செயற்பட வேண்டுமென்று வாழ்த்துகின்றேன்.

நிகழ்வில்சமூகசேவையாளர்களானகதிர்.செல்வபிரகாஷ் ஞானேந்திரன் ஆகியோர் வாழ்த்துரைவழங்கினார்கள்.

வெற்றிநியூஸ்இணைய தளத்தைச் சேர்ந்த சங்கீத், சனுசன், தசானந்த் ஆகியோர் நோக்கம் பற்றி பேசினர்.

நிகழ்வில் காரைதீவு பிரதேசசபை செயலாளர் ஏ. சுந்தரகுமார், இளங்கவிஞர் விபுலசசி உள்ளிட்ட பலர் கலந்து சிறப்பித்தார்கள்.

## தமிழ்....

(இரண்டாம்பக்கத்தொடர்ச்சி)

இருந்து பிரிக்கமுடியாதவை என்று நாம் உறுதியாக நம்புகின்றோம். இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் தமிழ் மக்களின் பாதுகாப்பு ஆகிய இரு இரட்டை நோக்கங் களுக்கான உருவாக்கப்பட்ட இந்திய இலங்கை ஒப்பந்தம் 35வருடங்களின்பின்னரும் கானல் நீராகவே இருப்பது ஒரு துன்பியல்.

இந்தப் பின்னணியில், ஜூலை 21 இந்தியா வரும் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவிடம், இனியும்தாமதிக் காமல் வடக்கு கிழக்கு தமிழ் மக்களுடன் ஆட்சி அதிகாரங் களைப் பகிர்ந்துகொள்வதற் கான தனது அர்ப்பணிப்பை முழுமைப்படுத்தும்படி இந்தி யப் பிரதமரான தாங்கள் அழுத்தம் கொடுக்கவேண் டும்என்று கேட்டுக்கொள்கின் றோம் - என்றுள்ளது.

## இரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அங்கு கடும் பதற்றம் காணப்பட்டது. இதுதொடர்பாக யாழ்ப்பாண பிரதேச செயலர் சா,சுதர்சனுக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் பிரதேச செயலரின் தலை யீட்டால், சம்பவ இடத்தில் பொலிஸ் விசேட அதிரடிப் படையினர்களமிறக்கப்பட்டு நிலைமைகட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டது

மோதலுக்குரியபகுதியில் பொதுப் போக்குவரத்து தடைப்பட்டுள்ளது. வீதியில் போத்தல்கள் உடைக்கப்பட்டு பொதுமக்கள் பயணிக்க முடியாத நிலமை ஏற்படுத் தப்பட்டுள்ளது.

## சாணக்கியன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றபேருந்துவிபத்தின் போது 11 பேர் உயிரிழந்த சம்பவம் தொடர்பாகவும், மட்டக்களப்பில்இயங்கிவரும் தனியார் பஸ் உரிமை யாளர்கள்மற்றும்சாரதிகளைச் சந்தித்துப் பேசுவதற்காக பேருந்து நிலையம் சென்ற நாடாளுமன்ற உறுப் பினர் சாணக்கியன் மீதே தாக்குதலுக்கு முயற்சிக்கப் பட்டுள்ளது.

முறையான அனும தியற்ற பேருந்துகள் சேவை யில் ஈடுபடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் அவற்றைக் கட்டுப்படுத்தக் கோரியும் மட்டக்களப்பு பேருந்து உரிமையாளர்கள் நேற்று நகரில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது சட்டவிரோ தமான முறையில் இயங்கி வரும்பஸ்களைஉடனடியாக நிறுத்தவேண்டும் என்று அவர்கள் வலியுறுத்தினர். கிழக்கு மாகாண வீதிப் போக்குவரத்து அதிகாரியின் அசமந்தப் போக்குக் காரண மாகவே 11 உயிர்கள் இழக் கப்பட்டுள்ளன என்றும் குற்றஞ்சாட்டினர். இதற்கு எதிராக நடவடிக்கை எடுக்கும்படியும் ஆர்ப்பாட்டக் காரர்கள் வலியுறுத்தினர். .

இது தொடர்பில் ஊடகங் களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்இரா.சாணக்கியன் கருத்துத்தெரிவித்துக்கொண் டிருக்கும்போது உள்நு ழைந்த தமிழ் மக்கள் விடுத லைப்புலிகள் கட்சியின் உறுப்பினர்கள் இருவர், நாடாளுமன்ற உறுப்பின ரைத் தாக்குவதற்கு முற்பட் டதன்காரணமாகபோராட்டக் காரர்களால் அவர்கள் இருவரும் பிடிக்கப்பட்டு தாக்கப்பட்டு வெளியேற்றப் பட்டார்கள்.

இதைத் தொடர்ந்து பொலிஸாரின் உதவியுடன் பேருந்துகளின் அனுமதிப் பத்திரங்களைநாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் அதிரடியாகச் சோதனை செய்தார். (02)

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களுக்கான பதில்களைக் கண்டறிதல், பாரிய புதை குழிகள் தொடர்பான விசார ணைகள் உள்ளிட்டவற்றின் முக்கியத்துவம் பற்றி இதன்போது விவாதிக்கப் பட்டது.'- என்று குறிப்பிட்டுள் ளார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் சார்பில் அந்தக் கட்சியின்பேச்சாளரும்வெளி விவகார விடயங்களைக் கையாள்பவருமான நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன், ரெலோ சார்பில் அதன் தலைவர் செல்வம் அடைக்கலநாதன், புளொட் சார்பில் அதன் தலைவர் த.சித்தார்த்தன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி சார்பில் அதன் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ் மக்கள் கூட்டணி சார்பில் அதன் தலைவர் சி.வி.விக் னேஸ்வரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (02)

## முத்திரை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கப்பட்ட முத்திரை மற்றும் அஞ்சலுறை ஆகியவற்றை இலங்கை தபால் மா அதிபர் றுவான் சத்கு மார வெளியிட்டு வைத்தார்.

இதன்பொழுதுதென்னிந் திய திருச்சபையின் பேராயர் கலாநிதி பத்மதயாளன் ,இலங்கைஅஞ்சல்மாஅதிபர் றுவான் சத்குமார , வட்டுக் கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் அதிபர் ருஷிரா குலசிங்கம், அஞ்சல் மா அதிபர் செயற்பாடுகள் ராஜித கே ரணசிசிங்க வடக்கு அஞ்சல் மா அதிபதி திருமதி மதுமதி வசந்தகுமாரி, யாழ். மாவட்ட அஞ்சல்அத்தியட்சகர் எஸ்.ஏ.டி.பெர்ணான்டோ, முத்திரைப் பணியகப் பணிப் பாளர் லங்காதி சில்வ ,நுண் ணாய்வுபரிசோதகர் திரு.கே. செந்தில்குமார், கல்லூரியின் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், பழையமாண வர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.-

## அடுத்த....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆளும் கட்சிகளுக்குள் மாறுப்பட்ட பல கருத்துகள் தோற்றம் பெற்றுள்ளன. இந்த ஆட்சியுடனேயே இருப்போம் என்று ஒரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள். எதிர்க்கட்சிக்குச் செல்வோம் எனப் பிறிதொரு தரப்பினர் குறிப்பிடுகிறார்கள்.

அனைத்து அரசியல் கட்சிகளுக்குள் முரண்பாடு காணப்படுகிறது. கட்சித் தலைவர் ஒருபுறம், உறுப் பினர்கள் மறுபுறம் என்ற நிலைகாணப்படுகிறது. இதற்கு மத்தியில் ஒரு ஆசனத்துடன் நாடாளுமன்றத்துக்கு வந்த அரசியல் கட்சி அடுத்த தேர்தலில் ஆசனங்களை அதிகரித்துக் கொள்ள இப்போதே முயற்சிக்கிறது.

மக்களை நெருக்கடிக் குள்ளாக்கி மறுசீரமைப்புக் களைசெய்வதால்முன்னேற் றமடைய முடியாது. ஆகவே மறுசீரமைப்புக்கள் மக்க ளுக்குச் சாதகமாக அமை யவேண்டும்.

தேசிய உற்பத்திகளை மேம்படுத்த புதிய செயற் திட்டங்கள் வகுக்கப்பட வேண்டும். இறக்குமதியை மாத்திரம் நம்பியிருந்தால் இன்னும் ஓரிரு வருடங் களுக்குப் பின்னர் மீண்டும் வங்குரோத்து நிலையை அடைய நேரிடும் - என்றார்.

## அதிபர் கைது

தீவக வலய பாடசாலை ஒன்றில்அதிபரினால்மாணவி ஒருவர் தாக்கப்பட்டார் என்று எழுப்பப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் நேற்றுக் காலை பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டார். சம்பவம் தொடர்பில் விசாரணை நடத் தச்சென்ற கல்வி அதிகாரிகள் மீது கிராமத்திலிருந்த சிலரால் தாக்குதல்நடத்தப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டம் தீவகத் தில் உள்ள மண்கும்பான் பகுதியில்பாடசாலைஒன்றில் கடந்த புதன்கிழமை தரம் 4இல் கல்வி கற்கும் மாணவி ஒருவர்மீதுபாடசாலைஅதிபர் தாக்கினார் என்று பெற்றோர் குற்றஞ்சாட்டினர். .

இந்த சம்பவம் தொடர் பாகப் பொலிஸாருக்கு வழங் கப்பட்ட முறைப்பாட்டின் அடிப்படையில் நேற்று பாடசாலை அதிபர் கைது செய்யப்பட்டார்.

மாணவி தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் விசார ணை நடத்த நேற்றுக்காலை தீவகக் கோட்டக் கல்வி அதிகாரிகள் சிலர் பாடசா லைக்கு நேரடியாகச் சென்றி ருந்த நிலையில் அங்கு கூடி இருந்த சிலர் கல்வி அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தினர் என்று தெரியவ ருகிறது. சம்பவம் தொடர் பாக ஊர்காவற்றுறை பொலி ஸாருக்கு வழங்கப்பட்ட தகவலின் அடிப்படையில் பொலிஸார்சம்பவ இடத்திற்கு சென்று விசாரணைகளை முன்னெடுத்தனர்.

# பொலிஸாரின் நடவடிக்கைகளை நியாயப்படுத்துகிறார் அமைச்சர்

### குருந்தூர்மலையில் பொங்கலை தடுத்த

குருந்தூர்மலையில் தமிழர்களில்ஒருபகுதியினரே பொலிஸாருடன் வலிந்து முரண்பட்டனர், காணொ லிகளில் அது தெளிவாகத் தெரிகின்றது. தமிழ் - சிங்கள மக்களுக்கு இடையே அங்கு ஏற்படவிருந்த முறு கலையே பொலிஸார் தடுத்து நிறுத்தினர். அதனால் அவர்கள் மீது வீணாகக் குற்றம்சுமத்தக்கூடாது.

இவ்வாறு தெரிவித்தார் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ். குருந்தூர்மலைச் சம்ப வம் தொடர்பில் செய்தியா ளரின் கேள்விக்குப் பதிலளிக் கையிலேயேஅவர்இதனைத் தெரிவித்தார்.

குருந்தூர்மலையில் கடந்த வெள்ளிக்கிழமை வழிபடச்சென்றதமிழ்மக்கள், பிக்குகளாலும் சிங்கள மக்களாலும்-பொலிஸாராலும் இடையூறுவிளைவிக்கப்பட்டு திருப்பியனுப்பப்பட்டமை தொடர்பில் சம்பவ இடத் தில் நேரடியாக இருந்த செய்தியாளர்கள் அறிக்கை யிட்டுள்ளர். தமிழர்கள் அமைதியாகப் பொங்கல் செய்ய முயன்றபோது தீயைக் காலால் மிதித்து அணைத்து பொலிஸார் அட்டூழியம் செய்துள்ளனர். தமிழர்கள்பொங்கல்செய்யப் போகிறார்கள், அங்கு கோயில் கட்டப்போகிறார்கள் என்று குருந்தூர்மலை விகாரை யின் பிக்கு சமூக ஊடகங்க ளில் அழைப்பு விடுத்துத் திரட்டி வந்த கூட்டத்தினர் தமிழர்களின் பொங்கலுக்கு எதிர்ப்புத் தெரிவிக்க அதற்கு ஆதரவாக நின்ற பொலிஸார் தமிழர்களைப் பொங்க விடாமல் திருப்பி அனுப்பி னர் என்று குற்றஞ்சாட்டப் பட்டது.

இந்தச் சம்பவங்கள் குறித்து அமைச்சர் மேலும் தெரிவித்ததாவது:

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மீது குற்றச்சாட் டுகளை முன்வைக்க முடி யாது. குருந்தூர்மலையில் இரு தரப்பினருக்கும் இடை யில் குழப்பம் ஏற்படக்கூடிய நிலைமை இருந்தது. அதை அமைதிப்படுத்தவே பொங்கலைச் செய்யவேண் டாம் என்று பொலிஸார் தடுத்தனர். அங்கு வழி பட்டுச் செல்லுமாறு பொலி ஸாரும், தொல்பொருள் திணைக்களத்தினரும் கூறினர். அதற்கு இணங்க தமிழ் மக்கள் செயற்பட்டனர்.

அங்குவழிபடவந்தபௌத் தர்களும்தமதுவழிபாடுகளை முடித்துவிட்டு அமைதியாகச் சென்றனர். தமிழ்மக்களுடன் சென்ற ஒரு குழுவினர் வலிந்துபொலிஸாருடன்முட்டி மோதினர். காணொளியைப் பார்க்கத் தெளிவாகத் இது தெரிகின்றது.

சட்டம் - ஒழுங்கை நிலைநாட்ட வேண்டியது பொலிஸாரின் கடமை. அதை வன்முறை வழியில் தடுப்பதற்கு தமிழர்களுக்கு எந்தவொரு உரிமையும் இல்லை. எனினும், குருந் தூர்மலைச் சம்பவம் தொடர் பில் விரிவான அறிக்கை யைச் சமர்ப்பிக்குமாறு பொலிஸ்துறைக்கு பொறுப் பான அமைச்சர் என்ற ரீதியில் பொலிஸ் பொறுப்பதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளேன்.' - என்றார்.

# வேலணை மத்திய கல்லூரியின் பழைய மாணவர்கள் போராட்டம்

யாழ்ப்பாணம் - வேலணை மத்திய கல்லூ ரிக்கு சைவப்பாரம்பரியமிக்க அதிபரொருவரை நியமிக் குமாறு கோரி பழைய மாணவர்கள் அப்பகுதி மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கல்லூரிக்கு முன்பாக இன்று திங்கட்கிழமை போராட்டம் முன்னெடுக்கப் பட்டது.

வேற்று மதத்தைனச் சார்ந்த ஒருவரை அதிபராக நியமிப்பதற்கு கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்து வருவதைச் சுட்டிக் காட்டியே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - வேலணை மத்திய கல்லூரி சைவப் பாரம்பரியமிக்கது என்று சுட்டிக் காட்டிய போராட்டகாரர்கள் அதனை மாற்றும் முயற்சிகளைத் தடுத்து நிறுத்த வேண்டும் - என்றனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு

தொலைபேசி இலக்கம்

076 443 80 22






இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.07.2023இல் வெளியிடப்பெற்றது.